

# திருக்கோயில்

ஆகஸ்ட் 1992 விலை ரூ. 3





மயிலை அருள்மிகு முண்டகக்கண்ணி அம்மன் ஆலயத் திருக்குட நீராட்டு விழா **21-6-92** ஞாயிறு அன்று மிகச் சிறப்புற நடைபெற்றது. மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் திருமிகு **எம்.** ஆனந்தன் அவர்கள் யாகசாலை பூஜையில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். நம் அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு துரை. சுந்தரேசன், ஐ.ஏ.எஸ். அவர்களும், மயிலை குருஜி சுந்தரராம சுவாமிகளும் உடன் உள்ளார்கள்.

மூகப்பு:
திருவல்லிக்கேணி
அருள்மிகு எல்லம்மன்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை. 34 | திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆங்கீரச ஆண்டு ஆவணி | ஆகஸ்ட் 1992 விலை ரூ. 3-00 | மணி: 8

திருக்கோயில் வாசகர்களுக்கு
அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர் களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்

அருளாளர்களின் அருள் உள்ளம்
—திருமந்திரச் செம்மல்
டி.வி. வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ்.

ஈசன் உவக்கும் இன்மலர்கள்
—பேராசிரியர் மது.ச. விமலானந்தம்

கந்தவேள் கருணை
—டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

நூல் மதிப்புரை
—நிறைமதி

தேவார மூவர் நடத்திய புரட்சி
—டாக்டர் நா. மகாலிங்கம்

வேண்டுதல் வேண்டும்
—க.பொ. நடராசன் எம்.ஏ. பி.எட்.

கீதைக்குறள்கள்
—அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்.

ஆடல் காணீரோ, திருவிளையாடல் காணீரோ
—கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

அன்பர் பணியும், இன்ப நிலையும்
—பேராசிரியர் டாக்டர்
பொன். சௌரிராஜன்

சித்திரபாரதம்
—செவ்வேள்

12 ஆண்டுக்கொருமுறை இலட்ச தீபம்
—கவிஞர் ஜோதி, பி.ஏ.

எல்லையிலா அருள் சுரக்கும் திருவல்லிக்கேணி எல்லம்மன் ஆலயம்.
—டாக்டர் த. அமிர்தலிங்கம்.

அருளாளர்களின்

# அருள் அனுபவம்



## திருமந்திரச் செம்மல்
## டி.வி.வெங்கட்டராமன் ஐ.ஏ.எஸ்

**திருமிகு தலைமைச் செயலாளர் அவர்கள், தலைமைச் செயலகம், சென்னை-600 009.**



‘திருமந்திரச் செம்மல்’

**திருமிகு டி.வி. வெங்கட்டராமன், ஐ.ஏ.எஸ்.**

**(14)**

இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவரும் ஆன்ம சாதனங்களை தீவிரமாகப் பற்றிக் கொண்டு ஆன்ம பக்குவம் அடைந்து, இறைவனின் திருவடிகளையே தஞ்சம் எனக்கொண்டு, கற்பனை வாழ்க்கையில் கவனம் செலுத்தாது, திருவருளுக்காக வேண்டி, எல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்தி வாழ்தலே பிறப்பின் நோக்கமாகும். உலகில் பிறந்த ஒவ்வொருவரையும் அளவில்லாத கர்மங்கள் ஒன்று கூடிதிரண்டு இடையீடின்றி, வாட்டி வருத்தும் என்பது உண்மை. அவரவரைச் சார்ந்த கர்மங்கள் எவ்வளவாக இழிவுபடுத்த வேண்டுமோ, அவ்வளவாக இழிவுபடுத்தும் என்பதில் ஐயமில்லை. ஆயினும், இறைவன் திருவருளாலும், குரு அருளாலும், எல்லாத் துன்பங்களையும் அனுபவித்து தொலைப்பதன் மூலமாகவே மாயையின் பிடிப்பு நீங்கும். எத்தனையோ பிறவிகளுக்கு வித்தாய் உள்ள கர்மங்களை ஒரே பிறவியில் முழுதும் அனுபவித்து முடிப்பது என்பது முடியாத காரியமாகும். ஆகவே, திருவருள் விதிப்படி அந்த அந்த வினைகளையெல்லாம் அனுபவிக்க அனுபவிக்க அவற்றின் ஆற்றல் குறைந்து நம்மை விட்டு நீங்கிவிடும். மெய்யடியார்களும் இதுபோன்ற துன்பங்களை அனுபவித்தவர்களே என்றாலும், அவை அனைத்தையும் திருவருட் செயல் என உணர்ந்து, எம் கடன் பணி செய்து கிடப்பதே என்பதே தலையாய அறம் என்று துணிந்து, எல்லாவற்றையும் சகித்துக் கொள்பவர்களே மெய்யடியார் ஆவர்.

இறைவன் வினை என்னும் மாயையை அகற்றி அருள் செய்கின்றான். அன்பரை அடிமை கொள்கின்றான். அவர்களுடைய வினையை அருளால் அனுபவிக்கச் செய்தும், அனுபவிக்காமல் நீக்கத்தக்கவற்றை நீக்கியும் அருள் புரிகின்றான். வினையை வினையாலேயே தீர்க்க வைக்கின்றான். அன்பர்களது வினையை எவ்வண்ணம் நடாத்தி அகற்ற வேண்டுமோ அவ்வண்ணம் நடாத்தி, அகற்றி ஆட்கொள்வதே கடவுளின் அருளாகும். இதை உணர்ந்தவர்கள் அடியார்கள். இவ்வாறு கடவுள் செய்வதால் தாங்களும் இறைவனுடைய அன்புக்கு பாத்திரமாகின்றோமே என்று நினைந்து மகிழ்பவர்கள் அடியார்கள்.

‘‘வெருளாவண்ணம் மெய்யன்பை
யுடையாய் பெற நான்வேண்டுமே’’

(திருவாசகம்-பிரார்த்தனைப் பத்து)

வினைப் போராட்டங்களால் துன்பம் அடைந்த மெய்யடியார்கள் எல்லாம் தங்களை பாவிகள் என்று இழித்துக் கூறி, நைந்து நைந்து, இரங்கி இருக்கின்றார்கள். (திருவாசகம்-உயிருண்ணி 10). ஒருவன் தன்னைப் பாவி என்றும், அருளுக்குத் தகுதியற்றவன் என்றும் உணர்வதற்கே பல பிறவிகளில் புண்ணியம் செய்திருக்க வேண்டும். மாயை நிலையில் சீவர்கள் தங்களைப் பாவிகள் என்று உணர்வது முடியாத காரியம். தங்களுடைய பிறவிகள் வினைவழி வந்தவை என்று அறியாதவர்கள் எடுத்த பிறப்பில் அனுபவிக்கும் கர்மங்களைக் கொண்டே அடுத்த பிறவிக்குரிய வினைகளுக்கு வித்திடுகின்றார்கள் என்று தெரிந்து கொள்வதில்லை.



இதனுடைய இலக்கணம் நமது ஆன்மிக நூல்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றது. திருமந்திரம், திருவாசகம், தேவாரம், திவ்விய பிரபந்தம் போன்ற அருள் நூல்கள் இந்த இலக்கணத்தை வலியுறுத்துகின்றன. ஆனால், அவற்றைக் கற்றதனால் மட்டும் பயனை அடைந்துவிட முடியாது. அவை எடுத்து வைக்கும் நியாயங்களை நன்கு உணர்ந்து, அவை காட்டும் வழியிலேயே சென்று, அவை எடுத்து வைக்கும் நெறியை பின்பற்றி நடக்கவேண்டும்.

இவ்வாறு சாதக யோகங்களை வழுவற தாங்கி, ஒழுகி, மாயையை அடிமைபடுத்தி, தங்களை மலமற்ற நிலைக்கு மெய்யடியார்கள் உயர்த்திக் கொள்வார்கள்.

சிலர் தாங்கள் படித்ததை வைத்து தங்களுக்கு எல்லாம் தெரியும் என்கிற கற்பனையுடன் நடந்து கொள்வார்கள். ஆனால், அவர்களுடைய நடத்தை வெறும் கற்பனைதான். வார்த்தைகள் சரளமாக வெளிவரும். ஆனால், அவற்றில் ஆழம் இருக்காது, உணர்ச்சி இருக்காது, அமைதி இருக்காது. அலை ஓய்ந்த, ஆழ்ந்த கடல் போன்ற தெளிந்த சிந்தனையுடையவர்களே பரம்பொருளின் வியாபகத்தை உணர்ந்து கொள்ள முடியும்.

''திரையற்ற நீர்போல் சிந்தை தெளிவார்க்குப்
புரையற் றிருந்தான் புரிசடை யோனே''.

(திருமந்திரம்.....2955)

தத்துவப் படித்து, பேசி, புகழ்ச்சி வலையில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளல் ஒருவனை ஆன்மீகப் பாதையில் நடத்திச் செல்லாது. விவரங்கள் தெரிந்திருந்தால் மட்டும் போதாது. விவரங்களை தனதாக்கிக் கொள்ள வேண்டும். தனதாக்கிக் கொள்வது என்றால் தத்துவப் பரம்பொருளை அனுபவித்து, தான் என்கின்ற உணர்வை மறுத்தலே ஆகும். மெய்யடியார்கள் அத்தகைய நிலையிலே நிற்பவர்கள்.

இயமம், நியமம், போன்ற ஒழுக்கங்கள் அவர்களுக்கு இயல்பாகவே வரும். அவர்கள் அதற்காக தீவிர முயற்சி செய்யத் தேவையில்லை. பாடுபட வேண்டியதும் இல்லை. அவர்கள் வாழ்க்கையே இயமம், நியமம், தாரணை, பிரத்தியாகாரம், தியானம் போன்ற ஒழுக்கங்களின் அடிப்படையில் அமைந்திருப்பதன் காரணத்தால், அவர்களுடைய வாழ்க்கையே இந்தஒழுக்கங்களின் இலக்கணமுமாகும்.

பயிற்சி வழியில் இந்த ஒழுக்கங்களை அடைய முற்படும்பொழுது, ஒவ்வொரு படியாக ஏற வேண்டியுள்ளது. ஆனால், மெய்யடியார்கள் நூல்களில் கூறப்பட்ட எல்லா நெறிகளுக்கும் சொந்தக்காரர்கள். அவர்கள் சாதனைகளை சிறிது சிறிதாக அடைவதில்லை. அவர்கள் சாதனை வடிவம். அவர்கள் உடல் உயிரை வாட்டி, வருத்தித் தவம் செய்துதான் உண்மை நெறிகளை கண்டுகொள்ள முடியும் என்பதில்லை. அவ்வாறு உடலை வாட்டாம

லேயே அந்த நெறிகளை அனுபவித்தவர்கள் மெய்யடியார்கள்.

அறிவதும் எளிது! உணர்வதும் எளிது! உணர்ந்ததை மற்றவர்களுக்கு எடுத்துரைப்பதும் மிக எளிது! ஆனால், உணர்ந்தவாறே ஒழுகுவது என்பது மிகவும் அரிது.

மெய்யடியார் பெருமை சொல்லுவதற்கு அரியது. அளவிடுவதற்கும் அரியது.

''தொண்டர்தம் பெருமை சொல்லவும்
பெரிதே''
''அடியர்தம் பெருமை அளக்கவும் பெரிதே.''

மெய்யடியார்கள் இறைவனின் திருவடியைக் கண்டவர்கள். திருவடியைப் பற்றினவர்கள். பலகோடி பிறவிகளில் செய்த நற்தவத்தின் பயனால், இறைவனுடைய திருவடிகளைத் தரிசனம் செய்து, பல்வேறு யோகங்களை இயல்பாகவே கடைபிடித்து, உடலாலும் உள்ளத்தாலும், ஒழுக வேண்டிய நெறிகளைப் பின்பற்றி, தம்முள்ளும் புறத்தேயும் இறைவனுடைய ஆற்றலைக் கண்டு அனுபவித்தவர்கள் மெய்யடியார்கள் ஆவர். இறைவன் அருள்வழி நின்று பணிசெய்து கிடப்பவர் தொண்டராவர். இறைவனுடைய அருள் சேர்க்கையால் மலம் நீங்கி, உள்ளம் முழுவதும் அருள் அமுதம் நிரம்ப நிற்பர்.

''அருளொடு பரா அமுதாக்கினன்''
என்பார் மாணிக்கவாசகர்.

''மாய வாழ்க்கையை மெய்யென் றெண்ணி
வேய தோளுமை
மதித்தி டாவகை நல்கினான்
பங்க னெங்கள் திருப்பெருந்துறை மேவினான்
காயத் துள்ளமு தூற வூறநீ கண்டு
கொள்ளென்று காட்டிய
சேய மாமலர்ச் சேவடிக்
கணஞ் சென்னி மன்னித் திகழுமே''
(திருவாசகம்-சென்னிப்பத்து)

''காயத்துண் மெய்ஞ்ஞானக் கள்ளுண்ண
மாட்டாதே
மாயக்கள் ளுண்டாரென் றுந்தீபற
வரட்டுப் பசுக்களென் றுந்தீபற''
(திருவுந்தியார்)

மெய்யடியார் சிவானந்தத்தில் சிவத்துக்கு அடிமையானவர். சிவபிரானிடத்தில் அடங்கி நின்றவரே அடியார் ஆவர். சிவபெருமானின் திருவடி சேர்ந்த பேரின்பத்தில் திளைத்திருப்பவரே சிவனடியார். தம்முள்ளும் வெளியிலும் சதா நடைபெறும் இறைவனின் திரு நடனத்தை கண்டு, களிப்பில் ஆழ்ந்தவர் அடியார் ஆவர்.

''அடியார் அரனடி யானந்தங் கண்டோர்
அடியா ரானவ ரத்தரு ளுற்றோர்
அடியார் பவரே யடியவ ராமால்
அடியார்பொன் னம்பலத் தாடல்கண் டாரே''.
(திருமந்திரம்......2740)

மெய்யடியார்கள் இவ்வுலகைச் சார்ந்தும், சாராமலும் நிற்பர். பிரபஞ்ச இயக்கத்தில் ஈடுபட்டாலும், அறியாமை வழிப்பட்டு மயங்காமல் அறிவு வழியில் இறையமுதை அனுபவித்தவர்களாகச் செல்வர். மயங்கா வழி செல்லும் மெய்யடியார்கள்நித்தியத்துவம் பெறுவர். மாயை வலைப்பட்டு மயங்கி, இரந்து, பிறப்புக்கு வித்திடமாட்டார்கள். அவர்களை 'வானுலகு ஆள்வர்' என்பார் திருமூல நாயனார். எந்த வகை சலனம் நேர்ந்தாலும், இறைவன் திருவடிகளில் வேரூன்றியவர்களாக சலனமற்று நிற்பர் மெய்யடியார்கள்.

''இயங்கும் உலகினில் ஈசன் அடியார்
மயங்கா வழிசெல்வர் வானுல காள்வர்
புயங்களு மெண்டிசை போதுபா தாள
மயங்காப் பகிரண்ட மாமுடி தானே.''
(திருமந்திரம்...1873)

சிவபெருமான் அடியவர் உடலில் குடி புகுந்து, அவர் சிந்தனையுள்ளே தேனூறி நின்று அவருடைய உடலை அமலமாக்கி பிறவியை ஒழிப்பன்.

''கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற்
போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கு மெங்கள் பெருமான்''
(திருவாசகம்-சிவபுராணம்)

''தந்தது உன் தன்னைக் கொண்டது என்
சங்கரா யார்கொலோ சதுரர் (தன்னைச்
அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்ற தொன்று என்பால்
சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்
திருப்பெருந் துறை உறை சிவனே
எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்
யான் இதற்கு இலன்ஓர் கைம்மாறே''
(திருவாசகம்-கோயிற்றிருப்பதிகம்)

இறைவன் திருவருளால் அடியவர்களுடைய உடல் இறப்பு, பிறப்பு என்னும் வட்டத்தைவிட்டு நீங்கி அருள் சுரக்கும் மலமற்ற சூக்கும தேகமாய் மாறி, பொன்மயமான வடிவம் பெற்று ''ஈனமில் காயயாக'' எங்கும் நீக்கமற நிறைந்த அருளாகிய சக்தியின் வடிவமாகும். சீவர் வீடு சிவ வீடாகும். மலமற்ற ஊன் அருள் வடிவாக, அதனைப் பிரியாதிருக்கும். உயிர் தானும் மலம் நீங்கி, சிவமாகுப் தன்மையைப் பெறுதலை மெய்யடியார்களிடம் காண்கின்றோம்.

—தொடர்ந்து வரும்

# ஈசன் உவக்கும் இன்மலர்கள்



பேராசிரியர் மது ச. விமலானந்தம்

இறைவனே நமக்கு எல்லாம், அனைத்தும் தந்த ஆண்டவனுக்கு நாம் கைம்மாறு ஏதும் செய்ய இயலாது. மனமார வாழ்த்தி, வாயார வழுத்துவதல்லால் வேறுயாது செய்ய இயலும்? அவன் எதுவுப் நம்மிடம் எதிர்பார்ப்பதுப் இல்லை. பண்ணில் நல்ல வண்ணம் மனித நேயத்துடன் வாழ்ந்தாலே போதும். நன்றி மலர் தூவின் சாலும், அதனால்தான் கல்வியின் நோக்கமும் பயனும் கடவுளைத் தொழுதலே என்கிறதுவள்ளுவம்; ''கற்றதனலாயபயனென் கொல் வாலறிவன் நற்றாள் தொழாரெனின்?

இறைவன் நம்மிடம் எதுவும் எதிர்பார்ப்ப தில்லை. நம்மை நன்னிலையில் வைத்த கடவு ளிடம் நன்றியுடன் நடந்து கொண்டால் போதும். வளவாழ்வில் வைத்த வள்ளலுக்கு அலங்காரம் செய்து அணிமணிபூட்டியும் மல ரால் சோடித்தும் மகிழ்கிறோம். ஆண்ட வனை வழிபடுவதில் ஒருமுறை மலரால வழி படுவது, மலர் வழிபாடு மகேசனுக்கு மகிழ் வளிப்பது. வண்ண வண்ண மலர்கள்கொண்டு போற்றுகின்றோம். வாச மலர்களால் வழிபடு கிறோம். புறத்தேபோடும் மலர்களைவிட, அகத்தூய்மையோடு வழிபடுவதையே ஆண்ட வன் விரும்புகிறான். பூக்கள் கொண்டு வழிபடு வதைவிட, பாக்கள் கொண்டு போற்று வதையே பரமன் பெரிதும் விழைகிறான். அத னால்தான் 'நமக்கு அர்ச்சனைபாட்டேயாகும்' என்கிறது பெரியபுராணம், தேவு-ஆரம்- தேவாரப் என்பதும் எண்ணுக.

என்ன மலர் கொண்டு வழிபட்டால் இறைவன் உவப்பான். அறிவு அனுபவம் குறைந்த ஒரு தோழி அறிவிற் சிறந்த தன் தலைவியிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது போலே உரையாடல் முறையில் ஓர் உயரிய பாட்டு உள்ளது. அதனை அனைவரும் அறிந்து ஒழுக வேண்டுவது கடமை.

தோழி தலைவியிடம் வினவுகிறாள்;  
''வெள்ளைநிற மல்லிகையோ, வேறெந்த  
மாமலரோ?  
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த  
மலரெதுவோ?''  
என்று. அதற்குத் தலைவி தரும் தகுந்த  
விடை;  
''வெள்ளை நிறப் பூவுமல்ல, வேறெந்த்  
மலருமல்ல  
உள்ளக் கமலமடி, உத்தமனார் வேண்டுவது'

இறைவன் வெள்ளை நிறத்தைத்தான் விரும்பு வானோ? அல்லது வேறு பெரிய மலரை விழை வானோ? வள்ளலாம் இறைவன் இணையடி கட்கு ஏற்றமலர் எது? எனக் கேட்கிறாள் தோழி, தலைவியோ வெள்ளைநிறமோ, பெரிய மலரோ விரும்பார். நம் உள்ளமாம் தாமரை யையே உள்ளுகின்றான் இறைவன் எனப் பதிலிறுக்கிறாள்.

'':காப்பவிழந்த தாமரையோ, கழுநீர்  
மலர்த்தொடையோ?  
மாப்பிள்ளை யாய் வந்தவர்க்கு, வாய்த்த  
மலரெதுவோ?''

இது தோழி கேட்பது கட்டு அவிழ்ந்த தாமரையா? கழுநீர்ப்பூவா? என்கிறாள். தலைவி தெளிவாகத் தரும் பதில்.

''காப்பவிழ்ந்த மலருமல்ல, கழுநீர்த்  
தொடையுமல்ல,  
கூப்பியகைக் காந்தளடி, கோமனார்  
வேண்டுவது.''

முறுக்கு அவிழ்ந்த மலரோ, செங்கழுநீர்ப் பூவோ எதுவுமல்ல, இரு கைகூப்பிய வணக்கத்

தையே விழைகிறார். அடுத்து கேட்டுத் தெளிவு பெறுகிறாள் தோழி:

''பாட்டளிசேர் பொற்கொன்றையோ ?
பாரிலில்லாக் கற்பகயோ?
வாட்டம் உறாதவர்க்கு வாய்த்த
மலரெதுவோ?''

கொன்றையுமன்று, கற்பக மலரும் அல்ல. தலைவி தெரிவிக்கிறாள் பாருங்கள்.

''பாட்டளிசேர் கொன்றையல்ல, பாரிலில்லாப்
பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி நாயகனார்
வேண்டுவது''

என வரையறுத்து விளம்புகிறாள். அருமையான பாடல், அற்புதமான யாப்பு. மூன்றே பாட்டுதான், மும்மணிகள் எனலாம். முத்துக்கள். பாட்டின் அமைப்பில் ஓர் அழகு. வளமார் சொற்கள் வாகாகவந்தமைந்துள. அடிதோறும் எதுகை எழில, ஒவ்வொர் அடியிலும் மோனை முறுவலிப்பு, நல்ல ஓட்டம், நயமான இசை, செஞ்சொற்கள், சிறந்த பொருள்.

பாட்டினைத் தொட்டாலும் கைமணக்கும், தொட்ட இடம் பூ மணக்கும், சொன்னாலும் வாய் மணக்கும், கேட்டாலும் செவி மகிழும். நவில் தொறும் நலம் பயக்கும். 'பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும்'' முத்தான சத்தான பாட்டு 'நட்டாலும் தமிழ்ப்பயிராய் விளையுப் நல்ல பாட்டு நளினப் பாட்டு.

ஒவ்வொரு பாட்டும் ஒப்பற்ற பாட்டு! ஒவ்வொரு வரியும் ஒரு லட்சம் பெறும்; எளிமையோ எளிமை, இனிமையோ இனிமை!

இறைவன் வள்ளல், உத்தமனார், மாப்பிள்ளை, கோமகனார், வாட்டம் உறாதவர் நாயகனார் என்றெல்லாம் ஏத்தப்பெறுகிறார். மலர்களாகவும், மல்லிகை, மாமலர் தாமரை கழுநீர் கொன்றை, கற்பகம் என்றடுக்கப் பெறுகின்றன.

புறமலர்கள் அல்ல. அகமலர்களே ஆண்டவன் வேண்டுவது, உடல உறுப்புக்களே வேண்டப்படுகின்றன. உள்ளுமாம் கமலமும், கூப்பிய கையாம் காந்தளும், நாட்டமுடை விழியாம் நெய்தலுமே வேண்டப்படுகின்றனவாம்.

எடுப்பும் தொடுப்பும் முடிப்பும் எடுப்பாய் உள்ளன.

''உள்ளக்கமலமடி, உத்தமனார் வேண்டுவது
கூப்பிய கை காந்தளடி கோமகனார்வேண்டுவது
நாட்டவிழி நெய்தலடிநாயகனார்வேண்டுவது''

மூன்றும் ஒன்றி நின்று, உள்ளத்தை அள்ளுகின்றன. சொல்லச் சொல்ல உள்ளம் அள்ளுகிறது மூன்றும் முக்கனிகள்.

பாட்டின் நளினமும், பொருள் வளமையும், சொற் சுகமும், என்னென்பது? பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா' என்ற இயம்பத் தோன்றுகிறது.

அற்புதப் பாடல்கள், அருமையான வரிகள், ஒவ்வோர் எழுத்தும் ஒரு லட்சம், மூன்று பாட்டும் முக்காலத்திற்கும் போதுமே, நினைந்து நினைந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து வனைந்து வனைந்து இன்புறுதற்குரிய இனிய பாட்டு, இப்பாட்டு கேட்டுக் கேட்டுக் கிறுகிறுத்துப் போவோமடா எனப் புகழலாம் போலிருக்கிறது. உள்ளம் தாமரை, கை, காந்தள், விழி நெய்தல் மலர்கள்; இந்த மலர்களே இறைவன் வேண்டுவது. இங்கே

''சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே
கரியனைக் காணாத கண்ணென்ன கண்ணே!
கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்ன
கண்ணே!
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே!
நாராயணாவென்னா நாவென்ன நாவே!
(ஆய்ச்சியர் குரவை 35, 36, 37)

என்ற சிலப்பதிகார வரிகள் சிந்திக்கத் தக்கன.

'செவ்விய மதுரஞ்சேர்ந்த நற்பொருளின் சீரிய கூரிய தீஞ்சொல் வவ்விய வளமார் கவி'' எனக் கம்பர் இந்தப் பாட்டு கேட்டுத்தான் எழுதி இருப்பானோ? இப்பாட்டிற்கே எழுதியது போன்ற சாற்றுக் கவி எனலாம். ஆத்திகரோ, நாத்திகரோ அனைவர்க்கும் அகமகிழ்வினை அளிக்கும் அருமையான பாட்டு! இரு துருவத்தினரையும் இணைக்கும் இனிய பாட்டு 'வாழ்வின் அடிப்படை மனித நேயம்; அதற்கு அவசியம் மனத்தூய்மையே 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்' மனத்தூய்மையே இறைவன் வேண்டுவது.

தகுந்த சொற்களைத் தகுந்த இடத்தில் வைத்திழைப்பதே வளமார் கவிதை.

NNNNNNNNNNNNNNNNNNNNNNNNNNNNNNNN

## முருகனை கும்பிட....

''முருகா என உனை ஓதும் தவத்தினர் மூதுலகில்
அருகாத செல்வம் அடைவார்!
வியாதி அடைந்து நையார்!
ஒருகாலமும் துன்பம் எய்தார்! பரகதி உற்றிடுவார்!
பொருகாலன் நாடுபுகார்! சமராபுரிப் புண்ணியனே!

—சிதம்பர சுவாமிகள்.

NNNNNNNNNNNNNNNNNNNNNNNNNNNNNNNN

இந்த ஏற்றமிகு பாட்டின் எழில், எவரைத்தான் ஈர்க்காது. ஈடுபடுத்தாது. ஓசை உருக்கம் யாரைத்தான் கவர்ந்திழுக்காது, கனியச் செய்யாது.

இந்த உயரிய பாட்டினை உருவாக்கியவர் யார் தெரியுமா? இருபதாம் நூற்றாண்டுப் பெரும் புலவர்; விபுலானந்த அடிகள்.

இலங்கை மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலய ஆலமரத்தின் கீழ் அமைக்கப் பெற்ற அடிகளாரின் சமாதியிலும் வரையப்பட்டுள்ளது இப் பாட்டு. முன்னே தனித்தனியே பிரித்துப் பார்த்தோம்; இப்போது மூன்றையும் ஒன்றாக-நன்றாகச் சொல்லிப் பார்ப்போம்: முழுப் பார்வையாக

''வெள்ளைநிற மல்லிகையோ, வேறெந்த மாமலரோ?
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது''.

'காப்பவிழ்ந்த தாமரையோ, கழுநீர் மலர்த் தொடையோ?
மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ?
காப்பவிழ்ந்த மலருமல்ல, கழுநீர்த் தொடையுமல்ல'
கூப்பியகைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது.''

''பாட்டளிசேர் பொற்கொன்றையோ பாரிலில்லாக் கற்பகமோ,
வாட்டம் உறாதவர்க்கு வாய்த்த மலரெதுவோ?
பாட்டளிசேர் கொன்றையல்ல பாரிலில்லாப் பூவுமல்ல,
நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது''

நாமும் பாடிப்பரவும் பாங்கினது இப்பரமன் பாட்டு, கூறக் கூற களிகூறும் இவ்இறைப்பாட்டினை நினைக்கும் போதே நெஞ்சம் நெக்குருகிறது. அருமையான பாட்டினை அன்றாடம் பாடிப்பரவி ஆண்டவன் அருள்பெறுவோமாக!



திருக்கழுக்குன்றத்தில் நடைபெற்ற திருஞான சம்பந்தர் இசை விழாவில கலைமாமணி லால்குடி சுவாமிநாதன் அவர்களுக்குத் ''தேவார இசைத் தென்றல்'' பட்டமும், நடராஜர் படிவமும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது தவத்திரு தொண்டை மண்டலாதினம் அவர்கள் நடராஜர் படிவம் வழங்கிச் சிறப்பிக்கின்றார். ஓய்வு பெற்ற நீதிபதி மாண்பமை டி.என். சிங்கார வேலு, பி.ஏ.பி.எல்., திருஞான சம்பந்தர் இசைவிழா அறக்கட்டளையின் தலைவர் டாக்டர் சேலம் மு. ஜெயலட்சுமி மற்றும் செயலாளர் திரு மு. கிருட்டிணன், ஐ.ஏ.எஸ். (ஓய்வு) ஆகியோர் உடன் உள்ளனர்.




டாக்டர் (54)

## திருமுருக கிருபானந்தவாரியார்

கனகலம் என்ற இடத்தில் (அரித்துவாருக்கு அருகில் உள்ளது.) கங்கை கரையில் ஆயிரம் யோசனை பரப்புள்ளதாக ஒரு அழகிய யாக சாலையமைத்தான். நாலுதிசைகளில நான்கு கோபுரங்களும், உணவுப் பொருள்கள் வைக்கப் பண்டகசாலைகளும், பெண்கள் இருக்கத் தனியிடங்களும், சமையற் கூடங்களும் உணவருந்தும் மண்டபங்களும், நடுவில் பெரிய அளவில் சதுரம், வட்டம் கோணம் என்ற மூன்று வடிவங்களில் ஓமகுண்டங்களும் ஓவியங்களும் மாலும் அயனும் திசைபாலர்களும் இருக்கும் ஆசனங்களும், தட்சன் இருக்கும் ஆசனமும் ஏனையோர் அமரும் பீடங்களும் உண்டாக்கினான்.

தட்சன் யாக சாலையின் அழகைக்கண்டு பெரிதும் மகிழ்ந்தான். யாகத்துக்கு வேண்டிய சமித்து முதலிய சாதனங்களைக் கொணருமாறு முனிவர்களுக்குக் கட்டளையிட்டான். காமதேனு, சங்க நிதி, பதுமநிதி, சிந்தாமணி கற்பகம் இவைகளைப் பார்த்து எல்லாப் பொருள்களையும் படைத்துத் தருமாறு பணித்தான். உணவு படைக்க முப்பதினாயிரம் வேதியரை ஏற்படுத்தினான். தேவர்கள் முனிவர்கள், வேதியர்களை அழைத்து வருமாறு தூதுவரை ஏவினான். தூதர்கள் திருமால், நவகோள்கள், அந்தணர்கள் முதலிய அனைவர்களையும் அழைக்க எல்லோரும் தட்சனுடைய ஆணைக்கு அஞ்சி அலைகடல் போல் வந்து கூடினார்கள். இலட்சுமி, சரசுவதி, இந்திராணி, அரம்பையர்கள் ஆகிய பெண் மணிகளும், ஆதித்தர்கள், உருத்திரர்கள், வசுக்கள், மருத்தர் முதலியோர்களும் கனகலத்தில் வந்து குழுமினார்கள்.

தட்சன் எல்லோரையும் வரவேற்றனன். பிரமதேவரையும் நாராயணரையும் சிறந்த பீடங்களில் இருத்தினான். இந்திரன் முதலிய இமையவர்கள் வரிசை வரிசையாக அமர்ந்தார்கள். தட்சனுடைய வேள்விக்குச் சென்று நல்லுணவு உண்டு வருவோம் என்று பூவுலகில் உள்ள வேதியர்கள் அங்கு சென்று மொய்த்திருந்தார்கள்.

தட்சன் தன் தூதர்களைப் பார்த்து, "நீங்கள் அழைத்தவர்களில் மறுத்தவர் உளரோ?" என்று கேட்டான்.

"அகத்தியர், சனகர், அத்திரி, வசிட்டர், பிருகு, ததீசி, துருவாசர், பராசரர் என்பவர்கள் உமது யாகத்துக்கு வர மறுத்தார்கள்" என்று தூதுவர் கூறினார்கள். "அவர்கள் சிவனுடைய பக்தர்கள் போலும், அவர்கள் வராமையால் நமக்கு என்ன குறைவு?" என்று ஏளனமாகச் சிரித்தான்.

ததீசி முனிவர் மிகவும் சிறந்தவர், திருமாலையும் வென்றவர், வச்சிரயாக்கையுடையவர்.

ததீசி முனிவரும், குபன் என்ற அரசனும் நண்பர்கள். ஒரு நாள் ததீசி 'அந்தணரே சிறந்தவர்' என்றார். குபன் அரசரே சிறந்தவர்' என்றான். இந்த வாக்குவாதத்தால் ததீசி சினங்கொண்டு அரசனை அடித்தார். குபனுங்கோவித்து வச்சிரப் படையால் ததீசியின் உடலைப் பிளந்தான். சுக்கிரரைத் தியானித்து ததீசி முனிவர்நிலத்தில் வீழ்ந்தார். சுக்கிரர் அங்குவந்து பிளந்த உடலைப் பொருத்தி எழுப்பினார். சுக்கிராச்சாரியர் காஞ்சீபுரத்தில் இட்டசித்தி தீர்த்தத்தில் முழுகி இட்டசித்தீசரை வழிபடுமாறு ததீசியிடம் கூறினார். அதுபடி ததீசி முனிவர் வழிபட்டு வச்சிர யாக்கை பெற்று வந்தார். குபனைத் தன் இடக்காலால் உதைத்தார். குபனுக்காகத் திருமால் வந்து ததீசியுடன் போர் புரிந்தார். திருமால் தோல்வியுற்றார். ததீசி முனிவர் வெற்றி பெற்றார்.

இத்தகைய வித்தகராகிய ததீசி முனிவர் தம்து சீடர்கள் புடை சூழ தட்சனுடைய யாக சாலைக்கு வந்தார். தட்சன் அவரை அன்புடன் வரவேற்று அமர்த்தினான். இவர்சிவ

ளிடம் உள்ள அன்பை விடுத்து நமது வேள்வியைக் காண வந்தார் போலும் என்று தட்சன் மனத்துக்குள் நினைத்தான்.

ததீசி முனிவர் ''தட்சனே! என்னை அழைத்த காரணம் யாது? என்று வினவினார்.

தட்சன் ''முனிவரே! சிவன் என் புதல்வியை மணந்து மறைந்து போயினான். பின்னர் எனக்குத் தெரியாமல் மகளை விடையின் மீது வைத்துக் கொண்டு சென்றான். மாயை செய்து என் மகளை மயக்கி வாசஞ் செய்தான். நான் அவர்களைக் காணும் பொருட்டுக் கயிலை சென்றேன். அந்த நக்கன் தன் காவல் பூதர்களைக் கொண்டு என்னை உள்புகுதா வண்ணம் தடுத்தனன். அதனால் நான் சிவனை வெறுத்து, என் தந்தை செய்த வேள்வியில் சிவனுக்கு அவியைத் தரக்கூடாது என்று தடுத்தேன். மத்தளம் வாசிக்கும் நந்தி அங்கு வந்து சாபங்கொடுத்தான். அதனால் என் தந்தையின் யாகம் தடைப்பட்டது. நான் இப்போது சிவனை விலக்கி வேள்வி செய்கின்றேன். இந்த வேள்வியைக் காண உம்மை அழைத்தேன்'' என்றான்.

தட்சனுடைய சொல்லைக் கேட்ட ததீசி முனிவர் வடவைத் தீயைப் போல் சீற்றமுற்றார். ''தட்சனே! உன் மதியிருந்தவாறு என்னே? உன் போக்கு நன்றாக இல்லை. மாலயனாதி வானவர்களுக்கும் அகில உலகங்கட்கும் தாதையாகிய சிவபெருமானை விலக்கி நீ வேள்வி செய்கின்றனையோ? பேஷ்! உன் திறம் நன்று. வேள்வி யாவானும், வேள்வித் தீயும், வேள்வியின் அவியைப் பெறுவானும் சிவபெருமானே என்று வேதம் விளம்புவதை நீ யறியாயோ?

''தேவதே வன்மா தேவன் சிறப்புடை ஈசன் எங்கோன்
மூவரின் முதல்வன் ஏகன் முடிவிற்கு முடிவாய் நின்றோன்;
ஆவியும் ஆவியானோன் அந்தணன் ஆதிஎன்றே
ஏவரை இசைத்த அம்மா எல்லையில் மறைகள் எல்லாம்.''

பேதையே! நீமதி மயக்கமடைந்துள்ளாய் சிவமே பரம் என்பது விளம்பும் வேத விதியை மறுத்து நீ வேள்வி செய்யத் தொடங்கியுள்ளாய். இவ்வேள்வி நிறைவு பெறாது. இது சிவ பிரான் ஆணை. இம்மகத்தில் சேர்ந்தோர் அனைவரும் மாய்ந்து ஒழிவார்கள் என்றார்.

தட்சன் ததீசி முனிவரைப் பார்த்து ''நீர் கூறிய சிவன் பரம்பொருள் என்றால் சுடலையின் எலும்பை அணியுமோ?'' வெந்த சாம்பலைப் பூசுமோ?'' என்று கேட்டான்.

ததீசி முனிவர் புன்னகை புரிந்து ''மதியிலாதவனே! உன்னுடன் உரையாடுவதும் பிழை. எனினும் இங்குள்ள அனைவரும் கேட்டுத் தெளிந்து உய்யும் பொருட்டு உரைக்கின்றேன். சிவபெருமான் பிரமாவை அதிஷ்டித்துப் படைக்கின்றார். திருமாலை அதிஷ்டித்துக் காக்கின்றார். முடிவில் சர்வ சங்காரம் புரிகின்றார். முடிவில் அடியார்களாகிய மாலயனாதி வானவரின் எலும்பை அணிகின்றார். அவர்களின் சிரங்களைத் தொடுத்துத் தரிக்கின்றார். அவர்களுடைய சிகையைப் பூணுலாகப் புனைகின்றார். அவர்கள் உடல் வெந்த சாம்பரையும் அவர்களின் நலம் நாடும் பொருட்டுப் பூசிக் கொள்ளுகின்றார். இது அப்பெருமானுடைய அளவிலா ஆற்றலையும் அருள் திறத்தையும் அறிவிக்கும்.

தட்சன் ''நீர் கூறிய சிவன் பன்றிக் கொம்பையும் ஆமை ஓட்டையும் அணிவது சிறப்போ?'' என்றான்.

ததீசி: 'இரணியாட்சன் மிக்க வலியுடன் இப்பூவுலகை நீரில் அழுத்தி உலகுக்கு இடர் புரிந்தான். தேவர்கள் வேண்ட திருமால் வராக வடிவெடுத்து அவனைக் கொன்று பூமியைப் பந்துபோல் நீரில் இருந்து எடுத்து உதவினார், தன் ஆற்றலை மதித்து அந்த வராகம் ஆரவாரித்து கடலைக் கலக்கி உலகத்தை நடுங்க வைத்தது.

அப்போது சிவமூர்த்தி அதனை அடக்கி அதன் கொம்பைப் பறித்துத் திருமார்பில் அணிந்து கொண்டார். வராகம் அடங்கியது.

பாற்கடல் கடைந்தபோது திருமால் ஆமை வடிவு கொண்டு மந்தரகிரியைத் தாங்கினார். பின்னர் தமது ஆற்றலை நினைத்து அகந்தை கொண்டு கடலைக் கலக்கித் துயரம் செய்தது. ஈசன் அங்கு வந்து ஆமையை அடக்கி அதன் ஓட்டைப் பறித்து அணிகலனாக அணிந்து கொண்டார். இதுவே சிவமூர்த்தியின் ஆற்றலையும் அருளையும் தெரிவிக்கும்'' என்றார்.

தட்சன்: 'சிவன், புலித்தோல்உடுக்குமோ? மழுவையும் மானையும் ஏந்துமோ? பிச்சையெடுத்து உழலுமோ? கூத்தாடுமோ? பாம்புகளைப் பூணுமோ? ஆடையின்றி நக்கன் ஆகுமோ?'' என்று கேட்டான்.

ததீசி: ''தாருகவனத்தில் வாழ்ந்த நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்கள் கன்மமே பயனைத்தரும். பயன்தர கர்த்தா வேண்டியதில்லை என்ற பூர்வ மீமாம்சக் கொள்கையுடையவர்களாகி சிவத்தைப் புறக்கணித்துத் தவத்தைச் செய்தார்கள்.

அவர்கட்கு அறிவு கொளுத்தும்பொருட்டு திருமாலை மோகினியாக வருமாறு செய்து சிவபெருமான் திசைகளே ஆடையாக திகம்பரனாகி தாருகவனத்தில் பணியேற்கச் சென்றருளினார், தாருகவனத்து முனிவர்கள் மோகினியின் ஒப்பற்ற அழகைக்கண்டு திடங் குலைந்து மோகினி பின் உழன்றார்கள். அவர்களுடைய மனைவியர்கள் பிட்சாடணமூர்த்தியின் எழிலால் உறுதி குலைந்து மையங் கொண்டுஅலைந்தார்கள்.



தாருகவனத்து இருடிகள் அதைக்கண்டு மிகவும் நாணினார்கள். வெகுண்டார்கள். அர னாரை அழிக்க வேண்டி அபிசார ஓமம் செய்து கொடும்புலி ஒன்றை உண்டாக்கிச் சிவ பெருமானான் மீது ஏவினார்கள். அடுந்தொழி லுடன் வந்த கொடும்புலியை உரித்து அரனார் ஆடையாக உடுத்துக் கொண்டார். சூலத்தை உண்டாக்கி அனுப்பினார்கள். அதனை ஐயன் ஆயுதமாக ஏந்திக் கொண்டார். மழுவையும், மானையும் ஏவினார்கள். அவற்றை இறைவர் செங்கையில் ஏந்திக் கொண்டார். ஓமத்தீயில் பாம்புகளைத் தோற்றுவித்து ஏவினார்கள். பரமன் அப்பாம்புகளை ஆபரணமாக அணிந்து கொண்டார். பூத வெள்ளங்களை உண்டாக்கி அனுப்பினார்கள். ஈசன் அவை களைத் தன் பரிவாரங்களாக ஆக்கிக் கொண் டார். வெண்டலையை உண்டாக்கி அனுப்பி னார்கள். அது உலகங்கள் செவிடுபடச் சிரித்துச் சென்றது. சிவபெருமான் அழைத்துச் சென்னி யில் சூடிக்கொண்டார். மந்திரங்களை ஏவி னார்கள். அவைகள் உடுக்கையாகி உருத்துச் சென்றது. அதனை அரனார் அங்கையில் பற்றிக் கொண்டார். முனிவர்கள் பின்னும் மூனிந்து முயலகன் என்ற பூதத்தை உற்பத்தி செய்து உய்த்தார்கள். இறைவன் அவனைக் கீழே தள்ளி அவன் முதுகின்மீது திருநடனம் புரிந்தார். கோபங்கொண்டு பல சாபங்கள் புகன்றார்கள். அவையாவும் பயனற்றன. பின்னர் அவர்கள் சிவபெருமானுடைய பெரு மையை யறிந்து, திருந்தி தாம் செய்த பிழை களை நினைந்து வருந்தி இறைவனைப் பொருந்தி உய்வு பெற்றார்கள்.

தட்சன்: ''யானைத்தோல் போர்க்குமோ?'' என்று கேட்டான்.

ததீசி: கயாசுரன் என்ற கொடிய அரக்கன் பிரமதேவரிடம் வரம்பெற்று, தேவர்கட்கும், முனிவர்கட்கும் பெருந்துன்பத்தைச் செய்தான். அமரர்கள் அஞ்சி காசிக்குச் சென்று மணி கர்ணிகையில் உள்ள ஈசனிடம் அடைக்கலம் புகுந்தார்கள். கயாசுரன் அங்கும் சென்றான். விசுவநாதர் பேரொளி வடிவாகத் தோன்றி அக்கயாசுரனைக் கொன்று அந்த யானைத் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டார் என்றனர்

தட்சன்: ''சிவன் கபாலம் ஏந்துமோ?'' என்று வினவினான்.

ததீசி முனிவர்: திருமாலும், பிரமதேவ ரும் ஒரு சமயம் பொன் மேருகிரியின் சிகரத்தில் அமர்ந்திருந்தார்கள். அமரர்களும் முனிவர் களும் அங்கு சென்று பரம்பொருளாகி நின்ற தலைவர் யார் என்று கேட்டார்கள். நானே பரம்பொருள் என்று பிரமனும் திருமாலும் கூறித் தருக்கமிட்டு மலைந்தார்கள். வேதமும் பிரணவ மந்திரமும் உருவந்தாங்கி வந்து ''சிவமே பரம்பொருள்'' என்று கூறியும் அவர்கள் அமைதியடையாது போர் புரிந் தார்கள். இடையே ஒரு பெருஞ்சோதி தோன்றி யது.



திருமால் உள்ளந்தெளிந்து அச்சோதியைச் சோதிக்காது சிவமென உணர்ந்து பணிந்து சென்றார்

பிரமன் மாயையால் மருண்டு உச்சியில் உள்ள சென்னியால் அச்சோதியை யிகழ்ந்தான். அப்போது சிவபெருமான் தமது திருவுள்ளத்தி லிருந்து வயிரவக் கடவுளைத் தோற்றுவித் தார்.

''நீலுறு சுடரின் மெய்யும்;நெகிழிகள் அகற்றுந் தாளும்
ஆலம துயிர்க்கும் செங்கழ் ஆரவவெற் றரையுஞ் சென்னி
மாலைகள் அநந்த கோடி வயின்வயின்பெயரும் மார்புஞ்
சூலமும் பரசும் நாணும் துடியும் ஏந் தியபொற் றோளும்''

ஆகிய உருவுடன் வயிரவர் விளங்கினார். இகழ்ந்த பிரமதேவரின் உச்சி சிரத்தை நகத்தால் கிள்ளிக் கையில் ஏந்தினார். அக்காலத்தில் திருமால் இந்திரன் முதலிய எல்லா இமயவர்களின் உதிரத்தையும் பலியாக ஏற்றார்.

பிரமன் வயிரவரைத் தொழுது வாழ்வு பெற்றான். வேதங்கள் நாய் வடிவாக வந்து வயிரவரை யடைந்தன.'' என்றார்.

தட்சன்: ''உங்கள் சிவன் வேற்றுருக் கொள்ளுமோ?'' என்றான்.

ததீசி: இந்திரன் ஒரு சமயம் நாம் தேவர் கோமான் என்று செருக்குடன் திருக்கயிலை மலைமேல் சென்றான். புரமெரித்த பரமன் பூதவடிவுடன் வாயிலில் இருந்தார். இந்திரன் பூதத்தைப் பார்த்து ''சம்புவைச் சேவிக்க இது சமயந்தானோ?'' என்று கேட்டான். பூதம் பதில் புகலாது இருந்தது. இந்திரன் வெகுண்டு அதன் மீது வஜ்ராயுதத்தை யேவினான். பூதமாயிருந்த சிவமூர்த்தி மீது பட்டு வஜ்ராயுதம் பொடியாகியது. அப்போது சிவமூர்த்தியின் கோபாக்கினி இந்திரனை வாட்டியது. அவன் பணிந்து தணிந்தான். சிவபெருமான் அக்கோபக்கனலைக் கடலில் விடுத்தார். அது மகவாகத் தோன்றியது

வருணதேவன் தனக்கு மகனாக வந்த அப்பாலகனைத் தழுவி உச்சிமோந்து வாழ்த்தினான்.

''ஊழி பேரினும் உலகம் பேரினும்
வாழி வாழிஎன் மைந்தன் நீயெனா
கேழில் ஆசிகள் கிளர்த்திப் போற்றினான்
ஆழி மால்கடற் கரசன் என்பவே''

குன்ற வில்லியின் கோபாக்கினியால் உதித்த குழந்தையாதலால் எல்லையில்லாத வல்லபத்துடன் அது விளங்கியது. அக்குழந்தை சிறிது அழுததனால் மண்ணும் விண்ணும் செவிடுபட்டன.

அப்பேரொலி கேட்டு அங்குப் பிரமதேவர் வந்தார். வருணன் தன் குழந்தையை அவருடைய கரத்தில் தந்து ஆசி கூறச் சொன்னான் அச்சிறுவன் பிரமதேவனுடைய நான்கு தாடிகளையும் பிடித்து ஈர்த்து இடர்புரிந்தான். பிரமதேவர் மெல்ல விடுத்து, இச்சிறுவன் சிவகோபத்தில் வந்தவன். இவனுக்கு வேறு வரபலம் தேவையில்லை. இவனைக் கண்டு

''நானும் அஞ்சுவன், நளினை காவலன்
தானும் அஞ்சுவன்; தவறில வேள்விசெய்
கோனும் அஞ்சுவன்; கூற்றும் அஞ்சும்; அவ்
வானும் அஞ்சும்; இம் மண்ணும் அஞ்சுமே''

என்று கூறி தண்ணீரில் பிறந்ததனால் ''சலந்தரன்'' என்று பேர் சூட்டிச் சென்றார்.

இவன் வளர்ந்து கிளர்ந்தெழுந்து போர் புரிந்து இந்திரனை வென்று அவனுடைய செல்வங்களைக் கவர்ந்தான். காலநேமி யென்ற அசுர வேந்தனுடைய புதல்வியாகிய பிருந்தையை மறந்து கொண்டான். அவள் அருந்ததியினும் மேம்பட்ட கற்புடையவள். தேவர்களின் முறையீட்டுக்கு இரங்கிய கரியமால் கருடன் மீது வந்து கடும்போர் புரிந்தார். இருபதாயிரம் யாண்டுகள் போர் புரிந்தும் வெல்லமாட்டாமல் அவனைப் புகழ்ந்து போயினார்.

சலந்தரன் தேடித் தேடி அமரரை வாட்டினான். புரந்தரன் முதலியோர் வேறு புகலிடம் காணாது கயிலைக்குச் சென்று முக்கண்ணனிடம் முறையிட்டார்கள்.

சலந்தரன் கயிலையை நாடிப் புறப்பட்டான். அவனுடைய மனைவியாகிய பிருந்தை மதி நலம் படைத்தவள். ''பிராணபதியே! நீர் கயிலை போக வேண்டாம். அங்கே சிவமூர்த்தியைப் பகைத்தால் உம் வாழ்வு முடியும்'' என்று அறிவுரை கூறித் தடுத்தாள். சீற்றத்தால் ஊற்றம் பெற்ற சலந்தரன் மனைவியின் வார்த்தையைக் கேளாது திருக்கயிலை சென்றான்.

சிவபெருமான் முதிய மறையோனாய் கயிலையில் ஒருபுறம் இருந்தார். அங்கு பொங்குங் கோபத்துடன் வந்த சலந்தரனைப்பார்த்து ''எங்கு வந்தனை?'' என்று கேட்டார். 'பெரியவரே! புராரியுடன் போர் புரிய வந்தேன்'' என்றான்.

''அப்பா! இப்பாரில் என் கால்விரலால் கீறிய இதனை எடுப்பாயேல் உன்னை நான் மதிப்பேன்!'' என்று கூறி காற்பெருவிரலால் நிலத்தில் வட்டமாகக் கீறினார் இறைவர். சலந்தரன் அதனைப் பேர்த்தான். பாரம் தாங்காது சிரத்தில் வைத்தான். அது சக்ராயுதமாகி அவனைப் பிளந்து மாய்த்தது. அமரர் அலக்கண் தீர்ந்தது. சக்கரப்படை கண்ணுதல் கரத்தில் அமர்ந்தது.

—தொடரும்.




### 1. மனிதன் ஏழை மனிதனா?

நூலாசிரியர்: டாக்டர் நா. மகாலிங்கம்

வெளியீடு: வானதி பதிப்பகம்,
13, தீனதயாளு தெரு, தி. நகர்
சென்னை-600 017.

பக்கம்: 335. விலை: 37.00.

''தேவார மூவர் நடத்திய புரட்சி,'' ''குமர குருபரர்'' ''இசையும் கலையும்'' முதலான 25 தலை சிறந்த கட்டுரைகளின் தொகுப்பு. ''வள்ளலார் பணிமன்றம்'' முதலான அமைப்புகளின் தலைவர் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்கள் எளிய, இனிய நடையில் நாட்டிற்குத் தேவையானநல்ல பல கருத்துகளைப் பல்வேறு தலைப்புகளில் கட்டுரைகளாகத் தீட்டியுள்ளார்கள். ஆசிரியரின் சிந்தனைச் சிறப்பிற்குச் சான்றாக ''தேவாரமூவர் நடத்திய புரட்சி'' எனும் கட்டுரை இதே திருக்கோயில் இதழில் எடுத்து வெளியிடப்பட்டிருப்பதை அன்பர்கள் படித்து மகிழலாம். அனைவரும் படிக்க வேண்டிய அருமையான நூல்.

### 2. சுற்றுலாச் சுகம்

நூலாசிரியர்: மு. குப்புசாமி எம். காம்.,

நூல்வெளியீடு: ஜெயசக்திப் பதிப்பகம்.
45-ஏ பம்மல் நெடுஞ்சாலை,
பம்மல், சென்னை-600 075.

பக்கம்: 144 விலை: 14.00

### 3. பல்லவ பவனி

நூலாசிரியர்: மு. குப்புசாமி எம். காம்.

நூல் வெளியீடு: ஜெயசக்திப் பதிப்பகம்,
45-ஏ, பம்மல் நெடுஞ்சாலை,
பம்மல், சென்னை-600075

பக்கம்: 224 விலை: 26.

இருநூல்களும் சுற்றுலா அன்பர்களுக்குப் பயன்படும் நூல்களாகும். ''சுற்றுலாச் சுகம்'' நூல் பெங்களூர், மைசூர், உதகமண்டலம், ஒஹேனக்கல், திருவனந்தபுரம் உள்ளிட்ட பல தென்னிந்தியச் சுற்றுலா இடங்களைக் கண்ட சுகத்தை எளிய இனிய நடையில்வர்ணிக்கிறது. ''பல்லவபவனி'' நூல் செங்கற்பட்டு சென்னை மாவட்டங்களில் உள்ள சுற்றுலா இடங்களை ஒரே நாளில் கண்டு மகிழ வழி காட்டுகிறது.

### 4. செயற்கரும் செய்கை செய்த சிவநேசச் செல்வர்கள்

தொகுத்துப் பதிப்பித்தவர்: அ. கி. ஆனந்த செட்டியார்,
ஜவுளி வியாபாரம், சித்தூர்,
ஆந்திரா-517 001.

பக்கம்: 84. விலை: 0.50 காசுகள்

0.50 காசு தபால் தலை அனுப்பினால், அன்பர்களுக்கு அடியார் வரலாறு கூறும் இப் பயன்மிகு நூலைத் தம் சொந்த செலவில் அனுப்பி வைக்கிறார் நூல் தொகுப்பாளர். பாராட்டத்தக்க கொடைப்பணி, அன்பர்கள் பயன் பெற வேண்டுகிறோம்.

### 5. கந்தபுராணம் (உரை நடையில்)

தொகுத்துப் பதித்தவர்: அ.கி. ஆனந்த செட்டியார்,
ஜவுளி வியாபாரம், சித்தூர்,
ஆந்திரா-517 001.

பக்கம்: 218 விலை: 6, தபால்செலவு ரூ.1

மலிவு விலைப் பதிப்பாக 218 பக்கம் உள்ள இச்சிறப்புமிகு கந்தபுராண நூலை ரூ. 7க்கு வழங்குகிறார் நூல் தொகுப்பாளர், சிறந்த அறப்பணி. அன்பர்கள் பயன் பெற வேண்டுகிறோம்.

### 6. இந்து சமயக் களஞ்சியம்

நூலாசிரியர்: மு. திரவியம், B.A.

வெளியீடு: திருமகள் நிலையம்,
55, வெங்கட் நாராயணா ரோடு,
தி. நகர், சென்னை-17.

பக்கம்; 326 விலை.; ரூ. 60

இந்து சமயம் பற்றிய அரிய கருத்துக்களை 20 ஆண்டுக் காலம் சேகரித்து, அனைத்துத் தகவல்களையும் வகை தொகை செய்து வழங்கியுள்ள ஆசிரியரின் பணி பாராட்டிற்குரியது. இல்லந்தோறும் இருக்கவேண்டிய இனிய நூல்.

''கோலும் புல்லும்

ஒருகையில் கூர்ச்சமும்

தோலும் பூண்டு

துயரமுற்று என்பயன்?

நூலும் வேண்டுமோ

நுண்ணறிவோர்கட்கே''

என்றெல்லாம் அறைகூவினார்கள்.

மக்கள் எல்லோரும் ஒரு குலம், கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசர்க்கு ஆட் செய்மின்-அதாவது பெண் கொடுத்துப் பெண் கொண்டு உறவு பெருக்குங்கள். சாதி வேற்றுமை வேண்டாம் என்று கூறினார்கள்.

இந்த நான்கைந்து நூற்றாண்டுகளில் தமிழகத்தில் பெண்ணடிமைத்தனம் புகுந்து விட்டது. ஆண்களுக்கு அது சாதகமாகவே இருந்தது.

சமண சமயத்தில் பெண்கள் இரண்டாம் பட்சமாகவே கருதப்பட்டார்கள்.

பெண்ணாகப் பிறந்தவர்கள் முக்தி மோட்சம் அடைய முடியாது என்பது அவர்களுடைய மூர்க்கத்தனமான வாதம்.

எவ்வளவு உயர்ந்தவர்கள் ஆனாலும் பெண்கள் ஆணாகப் பிறந்து நோற்றால்தான் மோட்சம் அடையலாம் என்றார்கள். ஆனால் நம் தேவார ஆசிரியர்கள் பெண்ணைப் பெருமை செய்தார்கள்.

கடவுளைப் .'பெண்ணமர் மேனியினான், மாது ஓர் கூறன்' மடவாள் தனோடும் அருள் காரணத்தின் வருவான்' என்றெல்லாம் பேசினார்கள்.

பெண்ணடியார்களை மற்றையடியார்களைக் காட்டிலும்கூட உயர்த்திப் புகழ்ந்தார்கள், மங்கையர்க்கரசியாரை,

''மங்கையர்க்கரசி

வளவர் கோன் பாவை

வரிவளைக் கைம்

மடமானி

பங்கையச் செல்வி

பாண்டிமா தேவி''

என்று பாடுகிறார் சம்பந்தர்.

சேக்கிழார் பெருமான் இன்னும் ஒரு படி மேலே சென்று

''மங்கையர்க்குத் தனியரசி

எங்கள் தெய்வம்

வளவர் குலத்தனிக் கொழுந்து

வளைக்கைமானி''

என்றெல்லாம் வர்ணிக்கிறார்.

மங்கையர்க்கரசியார் திருவடியைப் போற்றுவார் கழல்களை நாம் போற்றுவோம். என்று வாயார, உளமார, ஆன்மாவும் குளிரப் போற்றுகிறார்.



இந்த நான்கைந்து நூற்றாண்டுகளில் நட்ட கல்லெல்லாம் தெய்வமாகிவிட்டன.

சிறு தெய்வ வணக்கம் நாட்டைச் சீரழித்துக் கொண்டிருந்தது. இன்றளவும் முழுமையாக விட்டுப் போய்விடவில்லை. தேவார மூவர்களோ,

''செத்துச் செத்துப்

பிறப்பதே தேவென்று

பத்தி செய் கன்மனப்

பாறைகட்கு ஏறுமோ''

''சென்று நாம் சிறு தெய்வம்

சேர்வோம் அல்லோம்

சிவபெருமான் திருவடிக்கே

சேரப்பெற்றோம்''

என்றார்கள்.

அவர்கள் காலத்தில் மூலத்தானத்தில் சிவலிங்கத் திருவுரு ஒன்றே வணங்கப்பட்டது.

இன்றைக்கு மாகேசுர மூர்த்தங்கள் எனப்படும் விக்கிரகங்கள் எல்லாம் இறைவன் செய்த அருள் விளையாட்டை நினைவு கொள்வதற்காகச் சுற்றிலும் அமைக்கப்பட்ட ஓவியங்கள்.

# தேவார மூவர் நடத்திய புரட்சி!




டாக்டர் **நா. மகாலிங்கம்,**

**தலைவர், வள்ளலார் பணி மன்றம்.**


பன்னிரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னே தமிழகத்தில் ஒரு மாபெரும் பண்பாட்டுப் புரட்சி; நாகரிகப் புரட்சி நடைபெற்றது.

அந்தப் புரட்சியை நடத்திய இருபெரும் வல்லாளர்களையும் அதைத் தொடர்ந்து நடத்திச் சென்ற அருளாளர்களைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும். அவர்கள்தான் திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் என்ற மூன்று ஞானதீரர்கள்.

திருக்கோயில்களிலும், திருமடங்களிலும் இந்த மூவருக்கும் சிலைகள் உண்டு. அபிசேகம், ஆராதனை உற்சவங்கள்கூட உண்டு. ஆனால் மக்கள் மன்றத்தில் அவர்களைச் சரியான நெறியிலே ஆலயங்களும் மடங்களும் அறிமுகப்படுத்தத் தவறிவிட்டன என்று சொல்வதை யாரும் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

திருஞானசம்பந்தரும், அப்பரும், சுந்தரரும் என்ன புரட்சி செய்து விட்டார்கள் என்பது நீங்கள் கேட்கக்கூடிய கேள்வி.

அதற்கு முன் அவர்கள் வாழ்ந்த ஆறாவது நூற்றாண்டின் நிலைமையைச் சற்றுப் பார்க்க வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் சங்க காலத்தில் மக்கள் சாதி, பிறப்பு, இனம் என்ற வேறுபாடில்லாமல் வாழ்க்கை நடத்தி வந்தார்கள்.

சங்க நூல்களில் சாதி பற்றிய பேச்சு இல்லை.

தொழில்களில் வேதம் ஓதுதல் முதல்மீன் பிடித்தல் வரை ஏராளமான தொழில் செய்து வந்தவர்கள் இருந்திருக்கிறார்கள்.

ஆனால் ஒருவர் ஒருவரைத் தீண்டக் கூடாதென்றோ, தீண்டினால் தீட்டு என்றோ சொன்னதில்லை.

எல்லோரும் உடனிருந்து சமமாகச் சாப்பிட்டு இருக்கிறார்கள்.

தொழில்களில் வேறுபாடு உண்டு. ஆனால் தீண்டாமை என்ற ஒரு அறிவுக் குறைபாடு அக்காலத்தில் இல்லை. திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் மக்களை மக்களாகவே, ஒரு குலத்தவராகவே பார்க்க முனைந்தார்கள்.

நான்கைந்து நூற்றாண்டுகளில் உள்புகுந்து தமிழகத்தில் வேர் விட்டுவிட்ட சாதிக் கொடுமை என்ற நச்சுப் பூண்டுகளைக் கல்லி எறிய முயன்றார்கள்.

அதை ஒரு இயக்கமாகவே ஆக்கினார்கள்.

திருஞான சம்பந்தர் இந்த நாலைந்து நூற்றாண்டுகளில் தீண்டத் தகாதவராகிவிட்ட திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்னும் ஏழிசை வித்தகரைத் தம்மோடு அழைத்து இருத்தி வைத்துக் கொண்டார்.

அந்தப் பாணர் மனைவியார் மதங்க சூளாமணி என்பவரும் இவர்கள் திருக்கூட்டத்தில் ஒருவராகவே இருக்கிறார். எல்லோரும் திருக்கோயிலுக்குள் ஒன்றாகச் செல்கிறார்கள். ஒன்றாகவே சாப்பிடுகிறார்கள்.

ஞானசம்பந்தர் வெளியூருக்குச் செல்கிறார். திருநீலநக்க நாயனார் வீடு,

ஞானசம்பந்தர் திருநீலநக்க நாயனாரை அழைத்து' 'அன்பரே! நம் பாணருக்கும் அவர் மனைவியாருக்கும் இரவுதங்க இடம்தாருங்கள்' என்கிறார். திருநீலநக்கநாயனாரோ அந்தணர். அவர் என்ன செய்தார் தெரியுமா?

திருநீலகண்ட பாணருக்கும், அவர் மனைவியாருக்கும் தாம் அக்னிக் காரியம் செய்து வழிபடும் புனித வேள்விக் கூடத்திலேயே இடம் கொடுக்கிறார்.

தீண்டாமை ஒழிப்பில் பேச்சோடு நில்லாமல் இயக்கமாகவே செய்து காட்டியிருக்கிறார்கள் நம் பெருமக்கள்.

எதிர்ப்பு வராமல் இல்லை. வரத்தான் செய்தது. எதிர்த்தவர்களை நோக்கி,

''சாத்திரம் பேசும்
சழக்கர்காள்
கோத்திரமும் குலமும்
கொண்டு என்செய்வீர்?''

இவை பிற்காலத்தில் ஒன்று நூறாகிப் போய், தேவையற்ற சந்நிதிகள் பல சேர்ந்து விட்டன என்ற வரலாற்றையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தேவாரத்தில் பார்வதிக்கு என்று தனிப் பாட்டு ஏதும் இல்லை. பிள்ளையார் முருகனுக்கும்கூட தனிப்பாட்டு கிடையாது. இந்த நாலைந்து நூற்றாண்டுகளில் சமண பௌத்த ஆட்சி காரணமாகப் பிராகிருதம், பாலி, பைசாசம் ஆகிய மொழிகள் அரசியல் மொழிகளாகவும், சமய மொழியாகவும், கல்வி மொழியாகவும் தமிழகத்தை நிலை குலைத்துக் கொண்டு இருந்தன.

''மந்தி போல் திரிந்து ஆரியத்தொடு

செந்தமிழ்ப் பயன் அறிகிலா

அந்தகர்க்கு எளியேன் அலேன்''

என்று திருஞான சம்பந்தப்பெருமான் இதைப் பற்றிக் கூறுகிறார்.



இவர் வழியில் வந்த திருமாளிகைத் தேவர் ''அசிக்க ஆரியங்கள் ஓதும் ஆதரைப் பேதவாதப் பிசுக்கரைக் காணாகண், வாய் பேசாது, அப்பேய்களோடே' என்று கூறிச் செல்கிறார்.

மொழி உரிமைப் போராட்டத்தைத் தலைமையேற்று முன் நடத்திச் சென்றவர் திருஞான சம்பந்தர்.

தம்மை அவர் எப்படியெல்லாம் கூறிக் கொள்கிறார் தெரியுமா?

''தமிழ் ஞான சம்பந்தன்''

''முத்தமிழ் விரகன்''

''ஞான சம்பந்தன் உரை செய்த திரு

நெறிய தமிழ்''

என்று பதிகந்தோறும் தம்மைத் தமிழோடு தொடர்புபடுத்தியே ஞான சம்பந்தர் சொல்வதைக் காணலாம்.

ஞான சம்பந்தர் தோன்றிய காரணங்களுள் ஒன்று 'தமிழ் அயல் வழக்கின் துறை வெல்ல' என்பதாகும்.

தமிழல்லாத பிற மொழிகளால் வழிபட்டால்தான் இறையருள் கிடைக்கும் என்ற பிரசாரத்தை ஞான சம்பந்தர் தகர்த்தார்.

கடவுள் தமிழ் விருப்பன்; தமிழ் வடிவன்; தமிழிலே பாடி வழிபடுங்கள்.

தேவாரப் பாடல்களைப் பாடக் கேட்டாலேயே இம்மையிலும் மறுமையிலும் வருத்தங்கள் வந்தடைய மாட்டா என்று தமிழைச் சமய மொழி ஆக்கிய பெருமை தேவார ஆசிரியர்க்கு மட்டுமே உண்டு.

தமிழ், சமஸ்கிருதம், பாலி, பிராகிருத மொழிகளில் பெரும் புலவரான அப்பரடிகள், 'தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்' என்று சொல்வதை நினைவில் வைக்க வேண்டும்.

நாளுங்கோளும் பார்க்கும் வழக்கம் தொன்று தொட்டு வருவதுதான் என்றாலும் அந்த வழக்கத்தை உடைத்தெறிந்தவர் ஞான சம்பந்தர்.

சுத்த சன்மார்க்கத்தில் ஆண்டவரால் உண்டாக்கப் பட்ட நாட்கள் எல்லாம் நல்ல நாளே.

திருஞான சம்பந்தரை மதுரைக்கு அழைக்க அதிகாரிகள் காத்திருக்கிறார்கள். சம்பந்தர் புறப்பட ஆயத்தமாகிறார்.

அப்பரடிகள் வயதானவர். இந்த சிறு பிள்ளைக்கு எதிரிகளால் ஏதாவது ஆபத்து வந்தால் என்ன செய்வது என்று அஞ்சினார்.

''பின்னால் சமணர்கள் பொல்லாதவர்கள் நானே அவர்கள் கொடுமையை உணர்ந்திருக்கிறேன். உம் சாதகப்படியும் நாளும்கோளும் நல்லனவாக இல்லை'' என்று தடுத்தார்.

ஆனால் திருஞானசம்பந்தர், ''இறைவன் இருக்கிறான். ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, பாம்பு இரண்டும் உடனே ஆசறு நல்ல நல்ல, அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே'' என்று விடை கூறிவிட்டுப் புறப்படுகிறார்.

ஆனால் இன்று சம்பந்தர் வழிவந்த நாம் நித்திய கடமையைச் செய்வதற்குக்கூட நாள் பார்க்கிறோம்.

கடைத் தெருவுக்குச் சென்றுவர சகுனம் பார்க்கிறோம்.

மூலஸ்தான தெய்வத்தைவிட நவக்கிரக சந்நிதியில் தான் கூட்டம் அதிகமிருக்கிறது.

திருநல்லாற்றில் தர்ப்பாரண்யர் சந்நிதியில் காற்றோடுகிறது.

சனீஸ்வரன் சந்நிதியில் எள் விழ இட மில்லாதபடி கூட்டம். இது எதைக்காட்டுகிறது?

நம்முடைய இறை நம்பிக்கை அஸ்திவார மில்லாதது என்பதைத்தான் காட்டுகிறது.

ஞான சம்பந்தரும் அப்பரும் சுந்தரரும் கடவுளுக்கு முன் உயிர்கள் படும் துன்பத்தைக் களையவே முன் நின்றார்கள்.

கோயிலுக்குப் புறப்படுகிறார் சம்பந்தர். அழுகுரல் கேட்கிறது. ஒற்றை அழுகையொலி; பெண்ணொருத்தி அழுது கொண்டிருக்கிறாள் எனத் தெரிகிறது.

வழிபாட்டைத் தள்ளி வைத்துவிட்டு அந்தப் பெண்ணின் துயர் துடைக்க விரை கிறார்.

பாம்பு கடித்து மாண்ட அவள் காதலனை எழுப்பி இருவருக்கும் மணம் முடித்து அனுப் பிய பின்னர்தாம் ஆண்டவனைத் தொழ வரு கிறார்.

மக்கள் குளிர்ச்சுரம் பரவுவதால் அவதிப் பட்டார்கள். சம்பந்தர் விரைந்து சென்று உதவுகிறார்.

யாருக்காவது வலிப்பு நோயா, சம்பந்தர் தீர்த்து வைக்கிறார். இது ஒற்றைத் தனி நிகழ்ச்சி என்ற நினைக்காதீர்கள். ஒவ்வொன் றைத்தான் வரலாற்றில் எடுத்துக் காட்ட முடியும். பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதமாக.

''இரப்பவர்க்கு ஈய வைத்தார்
ஈபவர்க் கருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட் கெல்லாம்
கடுநரகங்கள் வைத்தார்''

என்பது தேவாரம்.

கொடுத்து வாழ்வதை வாழ்க்கை இலக் கணமாகப் போதிக்கிறது தேவாரம்.

''இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தல் பொருட்டு'' என்பதற்கு இலக்கியமாகத் தேவார ஆசிரியர்கள் வாழ்வு அமைந்திருக் கிறது.

தேவார ஆசிரியர்கள் முயற்சியாலும், பிரசாரத்தாலும் ஒடுக்கப்பட்ட வைதிக சமயம் தழைத்தது.

கோயில்கள் புதுப்பிக்கப்பட்டன. புதுக் கோயில்கள் தேவையுள்ள இடங்களில் கட்டப் பட்டன.

கோயில்கள் கட்டடம், சிற்பம், சித்திரம், இசை நாடகம் முதலிய கலைகளை வளர்க்கும் நிலையங்களாக மாறியது இவர்கள் காலத் தில்தான்.

இவர்கள் முயற்சியால்தான் அக்கோயில் கள் கல்விச்சாலைகளாகவும், மருத்துவ நிலையங்களாகவும், எளியவர்களுக்கு உண வளிக்கும் கூடங்களாகவும் மாறியது.

ஊர்ப் பொது மன்றமாகவும், தேர்தல் கள மாகவும், ஆவணக் களரியாகவும் மாறியது இவர்கள் காரணமாகவே.

ஞான சம்பந்தரும் நாவுக்கரசரும்கோயில் பண்டாரத்திலிருந்து ஒவ்வொரு காசு பெற்றுத் திருவீழிமிழலையில் பஞ்சம் தீர்த்த வரலாற்றை நினைக்கும் போதெல்லாம் நெஞ்சம் உருகும்.

இந்த நாலைந்து நூற்றாண்டுகளில் சமய பௌத்த முனிவர்கள் செல்வாக்கினால் இசை யும் நாடகமும் பேணுவாரின்றி நலிந்துபோய் விட்டன.

தேவார ஆசிரியர்கள் தமிழ்ப் பண்பாட் டின் ஆணிவேராகிய இசை நாடகத்தை மீண்டும் உயிர்ப்பித்துத் தழைக்கச் செய் தார்கள்.

இசையால் இறைவனை வயப்படுத்தலாம் என்றார்கள். அவனே ''ஏழிசையாய் இசைப் பயனாய் உள்ளவன்'' என்றார்கள்.

அவர்கள் சென்ற இடமெல்லாம் கூத்தும் பாட்டும் முழங்கின.

''கூத்தவரங்கன் ஓவாக் குழகன் குடமூக்கு''
''கொட்டாட்டொடு பாட்டு ஒலிஓவாத் துறையூர்''

''வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி
முகில் பார்க்கும் திருவையாறே''

ஞான சம்பந்தரும், நாவுக்கரசரும்பெரிய வல்லரசுகளைத் தன்னந்தனியாக நின்று எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது.

இவர் கையில் தாளம், அவர் கையில் உழவாரம். (புல் செதுக்கும் ஆயுதம்)

ஒருவர் கலையை ஆயுதமாகக் கொண் டார். ஒருவர் தொண்டை ஆயுதமாகக் கொண்டார்.

இருவர் கூட்டணிக்கு முன்னால் நிலை யின்றிக் காஞ்சிப் பேரரசும் மதுரை பேரரசும் சரிந்தன.

இவர்கள் போராட்டம், அன்புப் போராட்டம், அறப்போராட்டம், அருட் போராட்டம்.

சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் மீது அதிகாரம் செலுத்தியதை எதிர்க்கும் சத்தியாக்கிரகப் போராட்டம்.

சிவலிங்கத்தைப் பள்ளத்தில் போட்டு மூடிவிட்டு மேலே தங்கள் கடவுளை வைத்து விட்டார்கள் மாற்று மதத்தினர். பழையாறை யில் இது நடந்தது.

''வண்ணங் கண்டு நான் உன்னை
வணங்கியன்றிப் போகேன் என்று
எண்ணம் முடிக்கும் வாகீசர்
இருந்தார் அமுது உண்ணாதே.''

உண்ணாவிரதம் இருந்தார்.

அரசன் கவனத்தை அது ஈர்த்தது.

அப்பரடிகளுக்கு நியாயம் கிடைத்தது.

பிற்காலத்தில் காந்தியடிகள் கடைப் பிடித்த சத்தியாக்கிரகத்துக்கு விதை தேவாரத் தில் இருக்கிறது.

இந்த நான்கைந்து நூற்றாண்டுகளில் தெய்வத் தமிழ் நாட்டில் சமணத்தின் பேரால் நாத்திகமும், பௌத்தத்தின் பேரால் உலகாய மும் பரவிப் போயிருந்தன.

கருணை வள்ளல்களான மகாவீரரும் பௌத்தரும் செய்த சீர்திருத்தங்களுக்கு மாறான சிறுமை தமிழ்நாட்டில் பரவியிருந்தது.

யாரையும் யாரும் மதியாது நடந்த தான் தோன்றித்தனம் அரசியலில் காணப்பட்டது.

கொல்லாமைப் போர்வையில் கொலை நிகழ்ந்தது.

அதைவிட வேடிக்கையான அம்சம் என்ன வென்றால் வடக்கேயிருந்து தென்னகத்தே வந்து பரவிய காபாலிகம், காளாமுகம், வாமம், வயிரவம், பாசுபதம் முதலிய சைவ மதப் பிரிவுகள் தமிழகத்தில் சில முக்கிய இடங்களை தத்தம் கைகளில் வைத்துக் கொண்டு அனா சாரம் பரப்பியமையாகும்.

காபாலிகர்கள் கள் உண்பார்கள். மண்டை யோட்டில் பிச்சை ஏற்பார்கள்.

மயிலாப்பூர் கோயில், காபாலிகர்கள் ஆதிக்கத்தில் இருந்தது.

திருவொற்றியூர் கோயில், வாம மார்க்கத்த வர் கையில் இருந்தது.

அந்தக் கோயிலில் இருந்த பிடாரிக்கு மிகக் கொடுமையாக பலிகள் தரப்பட்டன.

## முருகா சரணம்

முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே - ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

—நக்கீரன்

பந்தண நல்லூர், ஆவூர் முதலிய பல கோயில்கள் பாசுபதர் பிடியில் இருந்தன.

அந்தக் கோயில்களுக்கு இன்றைக்கும்பசு பதீச்சரம் என்றே பெயர்.

இவர்களுடைய அனாசார வழிபாடுகளை நீக்கிச் சைவத்தின்மீது படிந்திருந்த மாசுகளை போக்கித் தூய்மையான அருளன்பு நெறியில் சுத்த சிவமார்க்கமாகத் துவக்கிய பெருமை தேவார மூவராகிய பெருமக்களையே சார்ந்த தாகும்.

இவர்களுடைய பெருமையை இன்னும் விரித்துக் கொண்டு செல்லலாம்.

இப்படிப்பட்ட சமய, சமுதாய, கலாசாரப் புரட்சியாளர்களை நாம் இருட்டறைக்குள் ளேயே பூட்டி வைத்து விட்டோம்.

இனியேனும் இவர்களுடைய வாழ்வை யும் வாக்கையும் தமிழ் மக்கள் நன்குணர்ந்து வாழ்க்கையில் கடைப்பிடிப்பதற்கு ஒரு இயக் கத்தையே தொடங்குவோம்.

இசைக் கலைக்கு இவர்கள் ஆற்றியபெருந் தொண்டு பற்றிய விளக்கங்களை எல்லாம் அறிஞர் பெருமக்கள்தமிழ் மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

தேவார நெறிதான் பண்டைத் தமிழிசைக் கும் இன்றைத் தமிழிசைக்கும் இடையே ஓர் இணைப்புப் பாலமாக இருக்கிறது என்பதை இசைவாணர்களுக்கும் கற்பிக்க வேண்டும்.

பள்ளிக்கூடங்களில் இசையை சொல்லிக் கொடுக்கும் முறையைக் கொண்டு வரவேண் டும்.

அதற்கு வேண்டிய வழிவகைகளை தமிழக அரசின் கல்வித்துறை செய்யும் என்று எதிர் பார்க்கிறேன்.

# வேண்டுதல் வேண்டும்

க. பொ. நடராசன், எம்.ஏ., பி.எட்.,

''வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கபட்டும்'' என்பது வள்ளுவர் வாக்கு. இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ வேண்டின் மனிதன் தன்னலம் துறந்து, பிறர் நலம் பேணித் தொண்டுள்ளம் கொண்டு செயல்படில் மனிதன் புனிதனாய் மகானாய் மாறிடலாம். அரிதாகிய இம் மானிடப் பிறப்பிலிருந்து இறப்பு வரை மானுட வர்க்கம் அடையும் அல்லல்கள் ஏராளம்! ஏராளம்! உலக ஆடம்பரங்களில் ஆழ்ந்து- மாயைகளுக்கப்பாற்பட்ட பரம்பொருளைப் பற்றிய எண்ணமின்றி ஆசைக்கடலில் துரும்பாய் அலைகிற மனுச்குல மாண்பினை என்னென்று எடுத்தியம்புவது!

இப்பிறவியில் நாம் ஆசைப்பட்ட பொருள்களை அடைய இளமையில் தாய், தந்தையரின் தயவினை வேண்டி நிற்டதும், வயது வந்ததும் நம் நிலையில்லா ஆசைகளை நாமே பாடுபட்டு அடைவதும் கண்கூடு. நிலைத்த இன்பமாம் பேரானந்தப் பெருவாழ்வினை மறுமையிலும் அடையும் வழியினை எண்ணிப்பார்த்தால் அதை அடைய ''தனக்குவமை இல்லாதான் தாளினை'' ''வேண்டுதல் வேண்டாமை இலாத இறைவனின் அடிகளைத்'' தொழுது வணங்கிடின் அவனருள் பெற்று அல்லல்கள் களைந்து அமரராவது உறுதியிலும் உறுதி.

''ஆசைக்கோரளவில்லை அகிலமெலாங் கட்டி ஆளினும் கடல்மீதில் ஆணை செலவே நினைவர்'' என்பார் தாயுமானவர். ஆசை அளவோடிருப்பின் நன்றாம். அவ்வாசை பேருக்கு ஆசை என்றால் பரவாயிலலை. அதுவே பேராசையாகி விட்டால்! விளைவது பெருந்தொல்லையன்றோ? ஆசை அழிவிற்கு அஸ்திவாரம் என்பதற்கு மைதாசின் 'தொட்டதெல்லாம் பொன்' கதை பொன்னான வழி காட்டியாகும். எத்தனையோ முனிவர்கள் அருந்தவங்களியற்றி அட்டமாசித்திகளைப் பெற்று அமரர்களானதும், பெற்ற வரங்களைப் பேராசையால் செலுத்தி அசுரர்களாய் அழிந்த கதைகளும் நமக்குக் கலங்கரை விளக்கமாக அமைந்துள்ளன.

உழவாரப் பணியோடு உயர் பக்திப்பணி பூண்டு பரமனருள் பெற்றார் அப்பர் பெருமான். ''அஞ்சுவது யாதொன்று மில்லை அஞ்ச வருவதும் இல்லை'' என்றருளிய அடியார்க்கும் ஓர் அவா. பற்றற்ற துறவிக்கும் பற்று வரலாமா? ''புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என் மனத்தே வழுவாதிருக்க வரம்தரல் வேண்டும்'' எனத் திருப்பாதிரிப் புலியூர் மேவிய இறைவனின் திருவடி வேண்டித்துதிக்கிறார் அத்துறவி. பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப், பற்றுக பற்று விடற்கு'' என்பது உலகப் பொதுமறை அன்றோ?

நற்கனி வேண்டிய கணவனுக்கு இறைவனின் கனிந்த அருளால், தெய்வீகக்கனிபெற்றுக் கணவனால் தெய்வமாது எனப் பணியப்பெற்ற புனிதவதி காரைக்கால் அம்மையார் மன்னும் இமய மலைமேவிய கைலைநாதரின் திருக்காட்சி பெறஊனுடல் களைந்து என்புருவுடன் நடனத் தலைவனின் கால்கள் பதியப்பெற்ற திருத்தலத்தில் தன் ஊனக்கால்கள் பதியக்கூடாது என்று தன் தலையையே கீழாக அல்ல தலையே காலாகக் கொண்டு, நடந்து, அம்மையப்பரால் அம்மையே! என அன்போடு அழைக்கப்பட்ட அருளரசி காரைக்கால் அம்மையார் இறவாத அன்பு வேண்டியதோடு அண்ணலே! அறவா! நீ ஆடும்போதுன் அடியின் கீழ் இருக்க வேண்டுப் என வரம்பெற்று அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒரு நாயகியாக மாறிய ஒப்பற்ற வரலாற்றையாவரே அறியார்.

மணியான வாசகங்கள் அமைய இறைவனின் பெருமைகளைத்தம் பாடல்களில் 'தேன் கலந்து, பால் கலந்து, செழுங்கனித் தீஞ்சுவை கலந்து, ஊன் கலந்து, உயிர் கலந்து உவட்டாமல் இனிக்கும் வண்ணம் உருக்கொடுத்தவர் வாதவூரார் எனும் திருவாசகத்தேன் தந்த மாணிக்கவாசகர். அரிமர்த்தனபாண்டிய மன்னரின் ஆணையால் பரிகள் வாங்கச் சென்ற பணி பேற்கொண்டு, பாதிப்பாதையில் பரமனருளால் ஈர்க்கப்பட்டு கோவில் பொருள்கொண்டு கோவில் கட்டிக் கொற்றவனின் கொடுந்துயர்க்காளாகினார் மணிவாசகர். அன்னாரின் துயர்துடைக்க வைகையில் வெள்ளம் பெருகச் செய்து மன்னன் மனதில் அருள்வெள்ளம் செங்கோலோச்ச ஆண்டவன் திருவிளையாடல் நடத்திய வரலாறு அகிலமறியும், சீர்திகழ் சிவபிரானின் திருவடிகளைத் தொடர்ந்து 'சிக்'கெனப் பிடித்த ''சிவச்செல்வர் குற்றாலத்தமர்ந்துறையும் திரிகூடநாதரின் திருவருள் வேண்டிப் பெற ''உற்றாரை நான் வேண்டேன் ஊர் வேண்டேன். பேர் வேண்டேன், குற்றாலத்தமர்ந்துறையும் கூத்தா! நின் குரைகழற்கென் கற்றாவின் மனம் போலக் கசிந்துருக

# கீதைக்குறள்கள்



**அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்**

**சிந்தனை அறிவும் செய்முறை அறிவும்**
**ஞான விஞ்ஞானயோகம்**

என்னைச் சரணடைந்து யோகத்தால்
என்னையுணர்
நன்னெறியைச் சாற்றுகிறேன் கேள்:
(7[1)

விஞ்ஞானம் என்னும் அறிவு விளக்கத்தை
மிக்கவுடை யோர்க்கிலை ஈடு. (7[2)

முத்தியை நாடி முயல்வோர்பல் ஆயிரத்தில்
சித்தியொரு வர்க்கேகிட் டும். (7[3)

மண்நீரும் தீகாற்றும் வானம் மனம்புத்தி
திண்அகங் காரமெட்டும் நான் (7[4)

இவ்வெட்டும் கீழாம் இயற்கைகள்;மேலியற்கை
இவ்வுலகைத் தாங்குமுறை கேள். (7[5)

இவ்விரு இயற்கைகளே பல்லுயிர்க்கும்
நற்கருவாம்;
அவ்வுயிர்க்கோ ஆதியந்தம் நான். (7[6)

என்னிலுயர் வேறுபொருள் எங்குமிலை;
பொன்நூலில்
நன்மணியாம் அண்டங்கள் மற்று. (7[7)

நீரில் சுவைகதிர் திங்களில் நீள்ஒளி
சீரியவா னில்நான் ஒலி. (7[8)

மக்களின் ஆண்மைநான் மண்ணின்மணமும்
நான்
அங்கினியில் செஞ்சுடரும் நான். (7[9)

உயிரில் உயிர்ப்புநான் வேதத்தில் ஓங்காரம்,
பயில்தவத்தோ ரின் தவம் நான். (7[9)

அறிஞர் அறிவும் உயிர்களின் வித்தும்
நிறைமொழியோர் உள்ளொளியும் நான்(7[10)

தன்னலம் சற்றுமிலா வன்மையரின்
வன்மைநான்
மன்னுயிரைப் போற்றுமன்பு நான். (7[11)

எப்பொருளில் முக்குணங்கள் உள்ளனவோ
என்னிடமே
அப்பொருட்கள் தோன்றின வாம். (7[12

என்னுள் இருப்பவவே அப்பொருட்கள்
என்றாலும்
என்றுமவற் றுள்நான் இலை. (7[12)

மாறிவரும் முக்குணத்தால் மக்கள் மயக்குற்று
ஈறிலான் என்னையறி யார் (7[13)

என்தேவ மாமாயை நீங்க எளிய வழி
என்னைச் சரணடைத லாம். (7[14)

தெளியா அறிவினர் தீயர் கடையர்
ஒளியில் அசுரப் பிறப்பு. (7[15)

அல்லலுற்றோர் ஞானம் அறிவுசெல்வம்
வேண்டியெனை
பல்வகையில் போற்றிநிற் பர். (7[16)

நால்வருள் மெய்ஞ்ஞானம் வேண்டுவரை
நான் விரும்பிச்
சால்புடன் நேசிப்பேன் நன்று. (7[17)

எல்லோரும் நல்லோரே என்றாலும் ஞானியாம்
வல்லோரே என்னைச்சார் வார். (7[18)

எல்லாமே ஈசனாம் என்றெண்ணும்
மெய்ஞ்ஞானம்
பல்பிறப்பில் பெற்றபய னாம். (7[19)

பற்பலதெய்வங்களைப் பல்லோர் வழிபடுதல்
பற்பல ஆசையா லாம். (7[20)

எவ்வுருவில் எம்முறையில் ஏதை வழிபடினும்
அவ்வவைக்குத் தக்கபலன்உ ண்டு. (7[21)

எப்பொருளை வேண்டி எதைநம்பிப்
போற்றினும்
அப்பொரு ளைத் தருவோன் நான். (7[22)

அற்ப அறிவினர் வேண்டும் நிலையற்ற
சொற்பஇன்பம் கேடே தரும். (7[23)

என்னையோ தேவரையோ ஏத்துவோர்
அவ்வவரைச்
சென்றடைவர் என்றுகொள் மற்று. (7[23)

அழியாப் பொருளாம் என்னை அறிவிலியே
அழியும் பொருளாய்க்கொள் வான். (7[24)

என்யோக மாயையால் இவ்வுலகில் பற்பலர்
என்னை அறிந்திலர் நன்று. (7[25)

முக்கால மும்உணர்ந்தோன் நானெனும்
உண்மையை
மக்கள் அறிந்திலர் நன்று. (7[26)

விருப்புவெறுப் புப்பாசம் விட்டகலார்
இப்புவியில்
மருளுடன் வந்துபிறப் பர். (7[27)

வல்மயக்கம் பாவம் கழிந்திடின் வாழ்த்தியே
நல்லன செய்தொழுகு வர். (7[28)

மூப்பு மரணம் தவிர்க்க முயன்றிடுவோர்
காப்பாம் எனைப்போற்று வர். (7[29)

வேண்டுவனே'' என வேண்டி நிற்கும் பாங்கு அவர்தம் மனக்கவலை போக்கும் மாமருந்து தனக்குவமை இல்லாதான் தாள் சேர்வதே என்பதை வெளிக்காட்டுகிறது.

''வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடி வருந்திய வள்ளல் அருட்பிரகாச வள்ளலார்'' ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவும், மதி, நிதியோடு நற்கருணையும் சண்முகத்துய்யமணி உண்மூகச் சைவமணியாம் திருமுருகனின் திருவருளை இரந்து நிற்பதன் உட்பொருள் நிலையா உலகில் நிலைத்தபொருள், மெய்ப்பொருள் இறைவனின் திருவடி நிழலே, வாழ்வினை உய்விக்கும் உயர்விக்கும் உறுமருந்தாம் என்பதை உணரலாம். ''ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செய்ய வேண்டும், நின் அருட்புகழ் பாடும் நிலையில் தப்பேது நான் செயினும் நீ பொறுத்தல் வேண்டும்''. அது மட்டுமா? தலைவ! நினைப்பிரியாத நிலையினை நான் வேண்டுவனே'' என்பதில் இரண்டறக் கலக்கும் இனிய பண்பினைத், திறனை எண்ணி வியக்கிறோம்.

தாயாகித் தந்தையுமாய்த் தாங்கி நிற்கும் தயாபரனைப் பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தனாம் பரம்டொருளிடம் தாயுமானவர் 'எவ்வுயிரும் என்னுயிர் போல எண்ணி இரங்கவும் நின் தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே'' என வேண்டுதல் விடும்போது உயிர்களிடத்து அவர் கொண்டுள்ள அன்பும், கருணையும், அவர் இறைவனிடத்துக் கொண்ட பக்தியின் மேம்பாடும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாகத் தெரிகிறது.

குணக்குன்றாம் குலசேகராழ்வார் திருப்பதி மலையுறை திருவேங்கடவனின் திருவடிகளில் தன்னை அர்ப்பணித்த அரசபக்தர். அவர் 'ஊனேறு செல்வத்து உடல் பிறவி வேண்டாது, வேங்கட மலையில், சுனையில் குருகாகவும், மீனாகவும், கவின்கானாறாகவும், படிகளாகவும், கம்பமாகவும் மாற வேண்டி இறுதியில் எம்பெருமான் சன்னதியில் ஏதேனும் ஆ( வனே'' என்கிறார். தொண்டரடிப் பொடியாழ்வாரோ ''அச்சுதா! அமரர் ஏறே! ஆயர்தம் கொழுந்தே என்னும் இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே'' எனத்தம் வேண்டுதலைத் தெளிவாகக் கூறியுள்ள அழகே அழகு!

''சொல்லடி சிவசக்தி எனைச் சுடர்மிகு அறிவுடன் படைத்து விட்டாய்-வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே'' எனத்தான் பெற்ற அறிவினைப் பேற்றினைப் பெருக இவ்வையகம் என வேண்டும் வரகவி பாரதியின் திறன் காணி நிலம் 'கேட்டுக் காளியிடம் வேண்டும்போது காணி நிலத்தோடு



## முருகர் வலம் வந்த காரணம்

**உலகில் இருக்கும் ஒவ்வொரு பொருளிலும் இறைவன் இருக்கிறான். அதேபோல் உலகத்தில் உள்ள ஒவ்வொரு பொருளும் இறைவனுக்குள் இருக்கிறது. இதை மனதில் கொண்டு பார்த்தோமானால் நமக்கு ஒரு உண்மை புரிகிறது. உலகப் பொருள்களில் இருக்கும் இறைவனைத் தரிசிக்க முருகன் சென்றான். இறைவனுக்குள் இருக்கும் உலகைத் தரிசிக்க விநாயகன் சுற்றி வந்தான்.**

தூணிலழகியதாய் மென்மாடங்கள் துய்ய நிறத்தினதாய், ஒரு மாளிகை, கேணி அதனருகே தென்னைமரக்காற்றும் இளநீரும் பத்துப் பன்னிரெண்டு தென்னை மரங்களும் பக்கத்தில் முத்துச் சுடரோடு நிலாவொளியோடு, கத்தும் குயிலோசையுடன் பாட்டுக் கலந்திடவே பத்தினிப் பெண்ணோடு கவிதைகள் வர அம்மா! நின்றன் காவல் எனக்கு வேண்டும் என வேண்டுகிறார். காணி நிலத்துக்குள்தான் எத்தனை அடக்க வேண்டுதல்கள்!

நாம் வேண்டும் வேண்டுதல்கள் தூயனவாய், சுயநலமற்றதாய், உலகிற்கு நன்மை தரத்தக்கதாய் அமைந்தால் அவை உறுதியாய் நம்மை வந்தடைந்து பேரின்பம் நல்கும். ஆதலின் வேண்டுவோம்— விடாது முயல்வோம்'-முயற்சி திருவினையாக்கும்.

# ஆடல் காணீரோ

## திருவிளையாடல்



## காணீரோ...!

கம்பன் கவிநயமணி

**வே. தியாகராஜன்**

[19]

குலபூஷண பாண்டியன் மதுரையை அரசாட்சி புரியும் காலத்தில் சவுந்தர சாமந்தன் என்பான் சேனாதிபதியாயிருந்தான். அவன் சிவனடியார்களைத் தெய்வமாகவணங்குபவன். சேதிராயன் என்ற இறுமாப்புடைய சிற்றரசன் ஒருவன் பாண்டியனின் மீது வீண்பகைகொண்டு மதுரையின்மீது படையெடுத்து வரப்போகிறான் என்பதை அறிந்த பாண்டியன், தனது சேனைத் தலைவனான சவுந்தர சாமந்தனை அழைத்து 'பொக்கிஷ நிதியிலிருந்து நிறையப் பணம் எடுத்துப் புதிய ஆட்களை நிறையச் சேர்த்து நமது சேனையைப் பலப்படுத்துக'' என்றான். மட்டில்லா மகிழ்ச்சி கொண்ட சாமந்தன் வேண்டிய பொருள்களை எடுத்துக் கொண்டு கோயிலுக்குச் சென்று 'இறைவனே! எனது அரசு காரியங்கள் வெற்றிகரமாக நிறைவேற வேண்டும். இப்பொருள்களை எல்லாம் உமக்கும் உமது அடியார்களுக்குமே செலவு செய்வேன்'' என்று வேண்டிக் கொண்டு அவ்வாறே செய்வானாயினன்.

''பண்ணியல் நான்மறைவிரித்த பரமேட்டி,
எங்கோமான்
எண்ணிய காரியம் முடிப்பாய்-இவை உனக்கும்
உன்னடிக்கீழ்
அண்ணிய மெய்யடியவர்க்கும் ஆதக்க; என
இரந்து அப்
புண்ணிய மாநிதிமுழுதும் அவ்வழியே
புயப்படுவான்''

கோயிலுக்குத் திருப்பணிகள் செய்தான், சிவவேடங்கொண்ட எவராயிருந்தாலும் அவரை எதிர்கொண்டழைத்து ஆவன செய்தான்.

''எவரேனும் உருத்திரசாதனம் கண்டால்
எதிர்வணங்கி
அவரே நம்பிறப்பறுக்க வடிவெடுத்த அரன்
என்று
கவராத அன்புள்ளம் கசிந்தொழுக
அருச்சித்துச்
சுவையாறின் அமுதருத்தி எஞ்சிய
இன்சுவைதெரிப்பான்''

முதல்நாள் ஆயிரமும்,இரண்டாம் நாள் இரண்டாயிரமும்,இப்படி நாளாக நாளாக அரசனது பொருள்களைச் செலவு செய்து கொண்டே வந்தான் சாமந்தன். அரசன் இதனையறிவானோ என்ற அச்சத்தில் அரசன் சந்தேகங் கொள்ளாதிருப்பதற்காக, பல ஊர்களுக்கும் சேனைக்கான ஆட்களை அனுப்புமாறு பொய் யோலை விட்டான். வெகு நாட்களுக்குப் பின் அரசன் சாமந்தனை நோக்கி ''நாளை மாலைக்குள் நமது சேனைக்கெனப் பதிவு செய்த ஆட்களை வரவழைப்பாயாக'' எனக் கட்டளையிட்டான். இது கேட்ட சாமந்தன் இறைவனது திருக்கோயிலை அடைந்து 'பெருமானே! அரசனது பொருள்களெல்லாம்செலவு செய்யுமாறு அருள் புரிந்தாயே! அரசன் கேட்டபடி சேனைகளை எவ்வாறு காட்டுவேன்'' எனமுறையிட்டான்.

''என்ற மன்னனுக்கேற்கச் சாமந்தன் இசைந்து
வெள்ளி
மன்றவனடிக் கீழ் வீழ்ந்து ''வள்ளலே! அரசன்
ஈந்த
குன்றுரழ் நிதியெல்லாம் கொண்டெனைப்
பணிகொண்டாயே
வன்றிறல் சேனை ஈட்டும் வண்ணம்
யாதென்ன நின்றான்.''

அடியார்க்கு அருள் செய்வதையே விரதமாகக் கொண்ட இறைவன் ''நாளைய தினம் சேனையுடன் அரச சபையில் தோன்றும். நீயும் அங்கிரு, கவலையுறாதே'' என அசரீரியாகப் பேசினார். மறுதினம் சிவபெருமான் தனது கணங்களையெல்லாம் வீரராக மாற்றி தனது வாகனமான நந்தியையே குதிரையாக மாற்றி அதன் மீது ஏறி ஒற்றைச் சேவகனாகத் தோன்றினார். அரசன் மண்டபத்திற்கு வந்து சேனையைக் கண்டு, இவர்கள் எந்தத் தேசத்தவர்? எனக் கேட்க, சுந்தர சாமந்தன் பொற்பிரம்பு கொண்டு ஒவ்வொரு தேசத்தவராகக் காட்டினான்.

''கொங்கர் இவர்ஐய! குரு நாடர்இவர் ஐய!
கங்கரிவர்ஐய! கருநாடர் இவர் ஐய
அங்கர்இவர் ஐய! இவர் ஆரியர்கள் ஐய!
வங்கர் இவர்ஐய! இவர் மாளவர்கள் ஐய!''

அவ்வாறு காட்டும்போது ''குதிரையிமேலறி நிற்கும் அந்த வீரன் யார்?'' என அரசன் கேட்க ''இவ்வளவு பெரிய கூட்டத்தின் நடுவிலுள்ள ஒருவரை மாத்திரம் குறிப்பிட்டுக் கேட்டால் நான் எவ்வாறு கூற முடியும்?'' என்றான் சாமந்தன். ''அந்த வீரனை இங்கு அழைப்பாயாக'' என அரசன் கூறி, அவ்வீரனுக்கு அரசன் சன்மானம் செய்ய, சாமந்தனுக்காக இறைவன் அவற்றைப் பெற்றுக் கொண்டார். அந்நேரத்தில் ஒரு தூதன் அங்குதோன்றி ''அரசே'' நம் எதிரியான சேதிராயன் வேட்டைக்குச் சென்ற காலத்தில்ஒரு புலி அவனைக் அடித்துக் கொன்று விட்டது'' என்று கூறினான்.



அது கேட்டு மகிழ்ந்த அரசன் ''நமக்கு எதிரிகளே இல்லை. எனவே போரும் கிடையாது. சேனைகள் கலைந்து அவரவர் ஊருக்குச் செல்லலாம்'' எனக் கூற, சேனைகளுடன் இறைவன் திடீரென மறைந்தார். பாண்டியன் உண்மையறிந்து சாமந்தனிடம் ''கூடல நாயகரே உனக்காகத் தோன்றி உதவினார் என்றால் நீதான் எனக்குத் தெய்வம்'' என வணங்கி வாழ்ந்தான்.

''தனர்குயிர்த் துணையாய் நின்ற சாமந்தன்
தன்னை நோக்கி
உனக்கு எளிவந்தார் கூடல் உடைய நாயகரே
என்றால்
எனக்கு அவராவார் நீயே என்று அவற்குயாவும்
நல்கி
மனச்கவல் பின்றி வாழ்ந்தான் மதிவழி
வந்தனைந்தன்''.

இத்தகைய நல்லோனாகிய குலபூடண பாண்டியன் மதுரையை ஆண்டகாலத்து வேதத்தை மதியாது வேதியரை அலட்சியம் செய்தனன். அதனால் மாரி குறைந்தது. வேதியர் என்ற சாதிக்காகத் தனிப்பட்ட கௌரவம் கிடையாது. நம் முன்னோர்கள் ஒரு சாதி பெரியது,மற்றொன்று சிறியதுஎன்று சொல்லக்கூடிய அவ்வளவு கடினமான மனம் உடையவர்கள் அல்ல. பிராமணன் வேதம் ஓதுவதையே கடமையாகக் கொள்ள வேண்டும். வேறொன்றும் கவனிக்கக்கூடாது. அத்தகைய ஒருமைப்பாடு உடையவர்களையே தேவர் என்றனர். அவரவர் செய்யும் தொழில் காரணமாகச் சாதிகள் ஏற்பட்டனவே தவிர, உயர்வு தாழ்வு காரணத்தால் அல்ல. யாரை மந்திரியாக நியமிக்கலாம் என ஔவை கூறும் போது ''பிராமணன் மந்திரியாகக் கூடாது. செங்கோல் வளையும். சத்திரியர்கள் வீரர்கள், போரில் நாட்டில் நாட்டமுடையவர்கள். வைசியர்கள் வியாபாரம் மட்டும்தான் செய்யலாம். அரசாங்கம் வியாபாரமல்ல, நான்காம் வருணத்தவன்தான் மந்திரியாக வரலாம்'' எனக் கூறியதாக ஒரு பாடல் உண்டு.

''நூலெனிலோ கோல்சாயும் நுந்தமரேல்
வெஞ்சமராம்
கோலெனிலோ அங்கு குடிசாயும்-நாலாமவன்
மந்திரியும் ஆவான்; வழிக்குத் துணையாவான்
அந்த அரசே அரசு''.


நான்காமவரான சூத்திரர், சூத்திரங்களான தந்திரங்களைச் சொல்லித் தருவார் என்பதே பொருள், இறைவனது திருவடியிலிருந்து நான்காமவரான சூத்திரர் தோன்றினார் என வேதம் கூறுகிறது. எல்லோராலும் வணங்கத்தக்க திருவடியிலிருந்து தோன்றிய அந்தச் சாதியினர், உடலைத் தாங்கும் அஸ்திவாரமாகக் கால்கள் எவ்வாறு விளங்குகின்றனவோ, அவ்வாறே நான்காமவர் சமுதாயத்திற்கு யாவற்றையும் தாங்கும் அஸ்திவாரமாக விளங்குவார் என்பது அறிந்து மகிழத்தக்கது. எனவே தற்காலம் உள்ள சாதி மதப் பூசல்களை மறந்து நாம் யாவரும் ஒருதாய் வயிற்று மக்களாக மாறி, நாட்டிற்குச் சேவை செய்து வாழ இறைவனான சோமசுந்தரப் பெருமானை வேண்டுவோமாக! **[தொடரும்]**

# அன்பர் பணியும் இன்ப நிலையும்

பேராசிரியர் டாக்டர் பொன். சௌரிராஜன்

தமிழ்த்துறைத் தலைவர்

திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி.



தாயுமான சுவாமிகள்

'தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே' என்றார் ஔவையார். 'வெறும் வீணருக்கே உழைத்துடலம் மாயமாட்டோம்: பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழுவோம்' என்று தொண்டர்தம் பெருமிதத்தை எடுத்துரைத்தார் பாரதியார். 'நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்; கோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாய்க் கொய்மலர் சேவடி இணையே குறுகினோமே'' என்று அடியார் தம் இயல்பைத் தன் மேலிட்டு உலகுக்கு உரைத்தார் அப்பர் பெருமான்.

திருவள்ளுவர் தம் பாயிரமும் நுட்பமாக அடியார் திறத்தையும் அவர்தம் வழிபாட்டையும் உணர்த்தக் காணலாம்.

'கடவுள் வாழ்த்து' இறைவன் தன் முதன்மை, தனிமை, உயிரெலாம் உயிர்க்குமாய் இயைந்தமை, தூய்மை, மன மலர் மிசை ஏகினமை, விருப்பு வெறுப்பற்ற தன்மை, நன்று மீதின்மை, காணாமற்கண்டு கேளாது கேட்டும் பொறிவாயில் ஐந்தும் கடந்து நின்ற நிலைமை, ஒப்பின்மை, உயர்வின்மை, அறவாழியாப் அருமை ஆகிய குணங்களைக் குறிப்பிட்டு அந்நெறி நின்றாரே குறியாகிய விடுதலையை உறுவர் என்று அடிசேர்தலாகிய நெறிவழி வழிப்பாட்டைக் குறிப்பிடுகிறார் வள்ளுவர்.

அடிசேர்தலும் அவன் நெறி அறிதலும் அன்னை படைத்த இயற்கை வழி சிறப்பாக பஞ்ச பூதங்கள்வழி புலனாகும் என்று அடுத்து 'வான் சிறப்பு' வைத்து நீர் இருவகையிலும் துப்பாகும் பாங்கை உணர்த்துவார்.

அவன் குணம் நினைந்து அவன் அமைப்பறிந்து, அவன் அடிசார்ந்தவர்களே அடியார்கள். அவர்களும் விருப்பு, வெறுப்பிலார்; இருமை வகை தெரிந்து ஈண்டு அறவாழ்வு வாழும் சிவன் முத்தர்கள் செயற்கு அரிய செய்யவல்லார். பஞ்சபூத நுட்பம் அறிந்து வையத்தைத் தம் வயப்படுத்தியோர் உண்மையை உள்ளவாறே உணர்ந்து உணர்த்த வல்ல நிறைமொழி அவர் மறைமொழி. எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு பணிசெய்து கிடப்போர் அவரே அடியார். அவர்தம் வழிபாடே அடியார் வழிபாடு. அவன் திருவடி சேர்ந்து அவன் அமைப்புணர்ந்து ஒழுகும் அடியார் வழி சேர்தலால், அடியார் கூட்டத்தால், அடியார் வழிபாட்டால் பெறும்வாழ்வுப் பயன் 'அறம்'. அறத்தால் மணமாசு அகலும், சத்திநிபாதம் வாய்க்கும். உண்மைக் காட்சி எழும். போக்குவரவற்ற பூரணனோடு ஒன்றும் நிலை வாய்க்கும். இப்படி அடியார் நலத்தை, திறத்தை, வழிபாட்டை, பயனை திருவள்ளுவப் பெருந்தகையும் புலப்படுத்தியுள்ளார்.

அடியார் வழிபாடு இந்து சமயப் பிரிவுகளுள் சைவமும், வைணவமும் கண்ணெனக் கொண்டு போற்றிச் சிறப்புற்று வருகின்ற இரு சமயப் பிரிவுகள் ஆகும். சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகை அருளி அடியாரை வணங்கினார். நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி பாடி அடியார் வரலாற்றுச் சிறப்பைக் குறிப்பித்தார். பத்திச் சுவை நனி சொட்டச் சொட்ட அடியார் வாழ்வை திருத்தொண்டர் மாக்கதையாக உலகுக்குப் பாடித் தந்தார் சேக்கிழார் பெருமான்.

சேரர் குலசேகரர்தம் பாசுரங்கள் அடியார்தம் செம்மை, சிறப்பு, இயல்பு இறைவன் இருப்பு முதலியவற்றை எடுத்துரைக்கும், முதலாழ்வார் மூவர் திருக்கோவிலூர் நடைகழியில் கூடியபோது இடையே திருவொடும், பொன் மேனியொடும், ஆழி சங்கொடும் திருமால் தோன்றியதன் நுட்பம் அடியார் சங்கமத்தில் ஆண்டவன் தோன்றுவன் என்பதாகக் கொள்ளலாம்.

இத்தகு அடியார் வழிபாடு தாயுமானவர் பாடலில் சீரும் சிறப்பும் பெற்று விளங்குகிறது. 'வையத்துள் வாழ்வாங்கு வாழின்' தெய்வ நிலைதேடிவரும் என்று திருவள்ளுவர் கூறுவர்.



தாயுமானவரோ, 'அன்பர் பணி செய்தாலே இன்ப நிலைதானே வந்து வாய்க்கும்' என்று உறுதி கூறுகிறார்.

'அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கிவிட்டு விட்டால்
இன்ப நிலை தானே வந்து எய்தும் பராபரமே.

சமயத்தின் பணி ஒவ்வொரு மானுடனையும் ஆளாக்குவதே! அன்பர் பணி செய்ய ஆளாக்குவதே'. ஆளாகிய பிறகு அந்த ஆன்மா தானாக முயன்று பணி செய்து இன்ப நிலை அடைதல் வேண்டும் என்பது தாயுமான சுவாமிகளின் அடியார் வழிபாடு பற்றியநிறை வாக்கு; மறைவாக்கு என்லாம். ஆயினும் அவர் தம் 1452 பாடல்களை நுணுகிக் கற்கும் போது அடியார், அடியார் வழிபாடு பற்றிய உண்மைகள் அனைத்தும் அவற்றின் வழி புலப் படுகின்றன.

அடியார் தம் இலக்கணம், இயல்பு, பெருமை, அவரொடு அவர்பால் இறை உறையும் பெற்றி, அவர் வழிபாட்டின் பயன் எனப் பல்வாறு 'அடியார்' பற்றிய செய்திகள் அவர் பாடலில் கனிந்து நிறைந்திருக்கக் காணலாம்.

தாயுமானவர் 'அடியார்' என்றும் 'அன்பர் என்றும் குறிப்பிடுவதன் வழி இறைவனுக்கு உரியவர்கள் இறைவனுக்கே அன்பு செய்பவர்கள் அடியார் என்ற கருத்தைப் புலப்படுத்துகின்றார். அடியார், அன்பர் என்று அப்படி குறிப்பிடும் போதெல்லாம் பல இடங்களில் 'நல்லருள் படைத்த அன்பர்' (125) நல்லவர் (327) நல்லோர் (328) நல்லார்கள் (345) நல்லார் (1038) எனப் பல இடங்களில் 'நல்' என்ற அடைமொழியுடன் அடியவர்களைக் குறிப்பிடுகின்றார். அந்த நல் என்ற சொல்லுக்கு விளக்கம் தருவது போல் 'கொல்லா விரதம் கொண்டவர்', இச்சித்துச் சிந்தை வழிச் செல்லாதவர்' 'உணர்ந்தோர் பாமாலைக்கு உரியவன் நீ என்று கண்டோர்', சொல்லாலும் பொருளாலும் அளவையாலும் தொடரவொண்ணா அருள் நெறியைத் தொடர்ந்து நாடுவோர்,' 'மன அடக்கமுள்ளோர்' 'கனிந்த அன்பே பூசை என்போர்.' என்று நல்லாரின் இலக்கணங்களாகக் கொல்லாமை, உண்மை நெறி நிற்றல், அன்புடைமை, அருள் உடைமை, பொறை, தெய்வச் சான்றோர்பால் ஈடுபாடு ஆகிய பண்புகளைத் தாயுமானவர் குறிப்பிடுகின்றார்.

அத்தகு அடியவர்தம் இயல்பாகச் சில பண்புகளை அடிகளார் தம் பாடல்களில் தெளிவு செய்கின்றார். 'உன்மத்தர்' 'பேயர் 'பாலர்' இவர் தம் இயல்பு உடையவர்கள் துரிய வடிவினர், கால தேச கட்டுக்களை மறந்தவர்கள் (130), பாடுவார், ஆடுவார், நின்று நின்று அழுவார், இறைவன் திருவடியை முடிமேல் சூடுவார் (379); ஆடிப்பாடிமகிழ்ந்த நிலையினராய் இறைவனைத் தேடுவதே அவர்கள் இயல்பு, அவர்கள் 'ஆணவக் காட்டைக் களைந்து, அகங்காரக் கல்லைப் பிளந்து, மனத்தைத் திருத்தி, மோன விதையை ஊன்றி, அன்பு நீர் பாய்ச்சி, மாயப் பிறவியினின்று காத்துப் பேரின்பத்தைத் துய்ப்பவர்கள்' (72)' 'உன்னையே நினைந்து உருகி நாடிக் கருத்தழிந்து, சொல் தடுமாறி, உண்மை மறந்து, உணர்வதற்கு அரிய வன்மை இன்பத் துய்ப்பிலே இருப்பவர்கள் (77) இயமம், நியமம் முதலியவற்றைக் கடைப்பிடித்து யோக நெறியில் நிற்பவர்கள் (97) இத்தகு இயல்பினர் அடியவர்கள்.

அடியவர்தம் பெருமை அளப்பரியது. விவேகத்தில், தெளிவில், மெய்யுணர்வில் திளைப்பவர்கள் அவர்கள் (453) அவர் பெயர் உச்சரித்தலே முத்திக்கு வழியாகும். (582) அவர்கள் சித்தம் தெளிந்து சிவமானோர்(383) இறைவன் அவரோடு அவர்பால் இடங்கொண்டுள்ளான்.

'மாசற்ற அன்பர் நெஞ்சை மாறாத பெட்டகமாகக் கொண்டவன் இறைவன் (1318) தொண்டரொடு கூட்டு கண்டவன் (83) கருவி கரணங்கள் ஓய்ந்த தொண்டர்களிடத்தில் வீற்றிருப்பவன் (86) என்றெல்லாம் அடியாரையும் இறைவனையும் போற்றுகின்றார் தாயுமான சுவாமிகள்.

தொண்டர்களால் எளிதில் அடையப் பெறுபவன் இறைவன் என்று எடுத்தெடுத்து இயம்புகின்றார். 'அன்பர்' அன்புக்கு எளியன்' (55) அன்பினால் பக்திசெய் அன்பருக்கு அமிர்தசஞ்சீவி போல் வந்து ஆனந்த மழை பொழிபவன்' (80) தொழுகின்ற அன்பர் உளம் களிகூரமன்றுள்துளங்கும் ஆனந்தக் கூத்தன்' (433) 'தமை உணர்ந்தோர் பாமாலைக்குஅருள்பாலிப்போன்(175)காதலன்பர்க்கு கதி நிலை ஈதெனக்காட்டும் போதன்' (365) தொண்டருக்கு எளியான் (263) எனப் போற்றுகிறார்.

அடியாருக்குப் பணி செய்து, அடியாரைக் கண்டு, அவரோடிணங்கி, அவர் சொற்கேட்டு, அன்னவர்க்கு, பணி செய்து, அவர்களுடன் வாழ்வதே மனிதப் பிறவியில் பெறற்கரிய பேறு ஆகும். அன்பர்க்குப் பணி செய்யும் வாழ்வு வாய்க்குமேல் ''ஈண்டுக் கன்மம் எடுப்பன் அனந்தமே'' என்பர் அடிகளார். இறைவன் அன்பர்க்குப் பணி செய்யும் பேறு வாய்ப்பின் இவ்வுலக வாழ்வை நான் வேண்டுவன் என மீண்டும் உறுதி செய்வர். அந்த அன்பர்களோடு இயைந்து இணங்கி வாழப் பெரிதும் அவர் உறுவர். 'இறைவா' அடியார் பணி எனக்குக் கைகூடுமாறு எனக்குக் கருணை செய்வது எப்போது? (317) தாயாய் தந்தையாய் தனிப் பெரும் உறவாய் எனக்கு உள்ளவர் நின் அடியரே அன்றோ (341) நின் அடியார் கூட்டத்திலே மனது செல்ல அருள் புரிய மாட்டாயா?'' (579) 'சிற்சு கோதய விலாசமே யான் குறை பல கொண்டவன்; மருளன், உன் அருள் படைத்த அன்பரோடு சேர்ந்தால் அவனி சேர்ப்பையோ (125) அன்புருவாகி அடியரொடு இன்ப வீட்டினில் இருப்பனோ'

என்றெல்லாம் தாயுமானவர் தம் ஏக்கத்தைப் புலப்படுத்துகிறார்.

அடியார் காட்சி, அடியார் கேள்வி, அடியார் இணக்கம், அடியார் உறவு, அடியாருடன் இயைந்து வாழும் கூட்டு இவை எல்லாம் அவர்க்குப் பணி செய்வதற்காக, அப்பணியிலே ஆண்டவனைக் கண்டு வாழ்வு நிறைவுறுவதற்காகத் தனக்கு அடியார் பணி அருளல் வேண்டும் என்று அடிகளார் வேண்டுகின்றார். இறைவா! அடியவர்களுக்கு நானும் ஒரு அடியவன் அன்றோ, தொண்டரடித் தொண்டன் அன்றோ (627) சீரடியார்க்கு ஏவல் செய்யும் பக்தி நெறிக்கு முகம் பாரப்பா. அடியவர் போல் அருட்கண்ணினால் உன்னைக் காண அருளப்பா (234) உன் தொண்டர் பணி செய்வதென்றோ (582).

என்றெல்லாம் வேண்டுகிறார்.

சீவன் முத்தர்கள் வாசனாமலம் முற்றும் அகல பிராரத்தகருமம் கழிகின்ற வரை அடியாரது தோற்றத்தையும் ஆலயத்தையும் அவன் அருள் திருமேனியைக் கொண்டு வழிபடுதலை

''மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரனெனத் தொழுமே''

என்பர் மெய்கண்டார்' பொய் கண்டார் காணா புனிதமெனும் அத்துவித நெறிகண்ட 'மெய்கண்டார்தம் நெறி நிற்கும் தாயுமானவ அடிகளார்' அன்பர் அடி கண்டதே அருளின் வடிவமாய் (129) கொண்டு நெறி நின்றார். 'குருலிங்க சங்கமாம்கொண்ட திருமேனி'(482) என்றும் அவன் அருள் மேனியைப் போற்றிப் புகழ்ந்தார். எந்நாட்கண்ணியுள் 'அடியார் வணக்கம்' என்று பாடல் பல பாடினார். 'வெம்



பந்தம் தீர்த்து உலகாள் திருஞானசம்பந்தன்' அருள் என்றுஎனக்கு கிட்டும்,(1107). ஏரின் சிவ போகம் இங்கு இவர்த்தே என்ன உழவாரம் கொண்ட அப்பர் திருவடிக்கு அன்பு வைப்பது எப்போது? (1108) பித்தர் இறை என்று பேதை பால் தூது அனுப்பிய தமிழ்வித்தகர் சுந்தரர் கொண்ட மெய் வாழ்வைப் புகழ்வது எப்போது?' (1109) 'வாதவூர் ஐயனுக்கு அன்பு வைப்பது எந்நாள்' (1110) பட்டினத்தார், பத்திரகிரி பண்புணர்வது எந்நாள்'' (1111) 'மிக்க திருமூலர் அருள் மேவும் நாள் எந்நாள்' (1113).

என்றெல்லாம் தம் விழைவைப் புலப்படுத்துகிறார்.

இறுதியாக, இறையடியார் உலகத்து உயிரெல்லாம் உய்வதற்காக உடல்தாங்கி வாழ்வோர் என்ற உண்மையையும் அழகாகத் தெளிவாகச் சுருக்கமாக உணர்த்துகின்றார்.

''எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன் றறியேன்; பராபரமே''

அடிகளாரும் அடியார் வழிபட்டு ஆண்டவன் அருள் பெற்று, தான் உற்ற பேரின்பப் பெரு வெள்ளத்தை உலகத்து உயிர்கள் பெற்று உய்ய வேண்டும் என்னும் பேரார்வத்தால் 'சேரவாரும் செகத்தீரே' என்று அழைக்கின்றார்.

''காகம் உறவு கலந்துண்ணக்
கண்டீர்! அகண்டா காரசிவ
போக மெனும்பே ரின்ப வெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக வுருவாய்க் கிடக்குதையோ
இன்புற் றிடநாம் இனி எடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
சேர வாரும்! செகத்தீரே''!

இவ்வாறு அடியார் பணி, அடியராம் அன்பர் பணி, அன்பராம் உயர் பணி ஆற்றல் வழி இன்பம், பேரின்பம் அடையலாம்என்பது தாயுமானவர் கொண்டது மட்டுமின்றிக் கண்ட நெறியும் ஆகும்.

''அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்ப நிலைதானே வந்து எய்தும் பராபரமே''!


கனி முன்போல் மரத்தில் பொருந்தியதும் கிருஷ்ணர் அனைவருக்கும் ஆசி கூறி துவாரகைக்குப் புறப்பட்டுச் செல்கிறார். பாண்டவர்களும் அமித்திர முனிவர் வனம் விட்டு வந்து விட்டுனு சித்த முனிவரது தபோவனத்தில் வசிக்கிறார்கள். அத்தினாபுரத்தில் கொடிய துரியோதனன் சகுனி, கர்ணன், துச்சாதனருடன் சதியாலோசனை புரிகின்றான்.
பாண்டவர்கள் மாண்டால் அன்றி எனக்கு உறக்கம் இல்லை மாமா
வனவாச காலமும் சீக்கிரம் முடிந்து விடும் போல் இருக்கிறதே! பாண்டவர்களை எமலோகம் அனுப்ப ஏதேனும் வழி கூறுங்கள் மாமா
வழி இருக்கிறது துரியோதனா! இருக்கிறது! காளமா முனிவரை வரவழை. அபிசாரயாகம் செய்து அழித்திடுவோம்! பாண்டவர்களை
சித்திரபாரதம்
க.வ.செவ்வேள்
ப. MN.ராஜா
காளமா முனிவரின் திருவடிகளைப் பணிந்து, அளவற்ற பொருட் காணிக்கை புரிந்து அபிசாரயாகம் செய்ய வேண்டுகிறான் துரியோதனன்.
முனிவர் மலைப்புறம் சென்று தனியோரிடத்தில் கொடிய பல பலிகளைக் கொடுத்து அபிசாரயாகம் செய்ய, கோரப் பற்களைக் கொண்ட கொடிய நெடிய பூதமொன்று வேள்வித்தீயிலிருந்து வெளிப்படுகின்றது.
பூதம் விட்டுனு சித்த முனிவரின் தபோவனத்திற்கு விரைந்து வருகின்றது. அதே நேரம் வனத்தில் பார்ப்பன முனிகுமாரனது மான் தோலை ஒரு மான் எடுத்து ஓட ....
முனிகுமாரன் பாண்டவர்களிடம் முறையிடுகிறான். தருமர் மானைப் பிடிக்குமாறு தம்பிகளை அனுப்பித்தாமும் அவர்களைப் பின் தொடர்ந்து செல்கிறார். வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகிய நால்வர் ஓட்டமாய் ஓடியும் மானைப் பிடிக்க முடியவில்லை.




**கவிஞர் ஜோதி, பி.ஏ.,**

எல்லாம் வல்ல இறைவன் எங்கும் நிறைந்திருக்கிறான். எல்லாக் கோயில்களிலும் இருக்கின்றான். இனிய வரங்களை ஈந்தும், எழுச்சி மிக்க வாழ்க்கையை தந்தும் ஏற்றமிகு வாழ்க்கை உருவாக்கியும், கருணை மழை பொழிகிறான். அவன் உறையும் அத்துணை கோயில்களும் அற்புதமான கோயில்களே'. ஆயினும் ஐம்பெரும் பூதத்தலங்களுக்கு தனிச் சிறப்பு உண்டு. அதனினும் செம்மை நிறைந்ததாகத் தோன்றுவது திருக்கழுக்குன்றம்.

இவ்வுலகம் ஐம்பூத ஒருங்கிணைப்பின் விளைவாகும். ஐம்பூதம் சிறப்பினைக் காட்டவே ஐம்பூதத்தலங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. அவை:

| | | |
|---|---|---|
| மண் | —பிருதிவி | —திருஆரூர் |
| நீர் | —அப்பு | —திரு ஆனைக்கா |
| தீ | —தேயு | —திருவண்ணாமலை |
| காற்று | —வாயு | —திருக்காளத்தி |
| விண் | —ஆகாயம் | —சிதம்பரம் |

மேற்கண்ட ஐம்பெரும் தலங்களும் தத்தம் தனிச்சிறப்பை எடுத்துக் காட்டும் வகையான் அமைந்துள்ளது.

திருவாரூரில் 'வன்மீக நாதர்' புற்றுருவங் கொண்ட மூலவராக விளங்குகின்றார்.

திருவானைக்காவலில் நீர் நிரம்பும் மூலத்தானத்தாராக இருக்கின்றார்.

திருவண்ணாமலையில் கார்த்திகை திங்களில் கார்த்திகை விண்மீனில் தீபம் ஏற்றி வைக்கப் பெறுகின்றது.

திருக்காளத்தியில் வாயு நடமாட்டத்தில் அங்கு எரியும் விளக்குச்சுடர் அசைகின்றது.

சிதம்பரத்தில் விண்ணைக் குறிக்கும் ரகசியம் திரையிடப்பட்டு விளங்குகின்றது. வழிபாட்டின்போது திறந்து காண்பிக்கப் பெறுகிறது.

மண்ணாகி, விண்ணாகி, வளியாகி, ஒளியாகி, நீராகி எங்கும் நிறைந்துள்ள இறைவன் தனது தன்மையை எளிவந்தச் செயலை— எல்லாரும் உணரும் பொருட்டு திருக்கழுக்குன்றத்தில் சில சிறப்புகள் நிகழ்வதாக அருளிச் செய்திருக்கின்றார். அதனை மேற்கண்ட ஐம்பெரும் பூதத்துடன் ஒப்பிட்டு உணர்ந்து கொள்ளலாம்.

வேதம் சொல்லி தொழுதேத்தும் பல தலங்கள் உண்டு. ஆனால் வேதமே மலையாக அதன்மேல் இறைவன் வீற்றிருப்பது திருக்கழுக்குன்றத்தில்தான் என்பது தல புராணம்.

வேதகிரீஸ்வரர் வாழும் வேதகிரியைச் சுற்றி 'பிரதட்சிண பாட்டை' இருக்கின்றது. தேசுமுகிப்பேட்டை என்ற பகுதியில் மலையை சுற்றி மலையோரம் 'மலைமருந்து' என்று பக்தர்கள் மண்ணை எடுத்து இட்டுக் கொள்வதும், எடுத்துச் செல்வதும் அதனால் பல பேறுகள் பெறுவதும் அங்கு பல முறை நிகழும் வண்ணக்காவியங்களாம்.

திருக்கழுக்குன்றத்தில் சங்குதீர்த்தம் சால்புடையது. மலைதவழ் மூலிகை வேராடி வருகின்ற நீரும், மழை நீரும் ஊற்றுநீரும் கலந்து சிறுமுந்நீர் போல காட்சியளிக்கின்றது. தினம் வரும் கழுகு போல அங்கு பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை சங்கு பிறக்கிறது. இதுவும் தொடர்ந்து நடைபெறும் அபூர்வ நிகழ்ச்சியாம். குரு கன்னியாராசியில் பிரவேசிக்கும் போது 'தீர்த்தவாரி நடைபெறுகின்றது.

ஆண்டுக்கு ஆண்டு வரும் கார்த்திகை தீபம்போல, அங்கு பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒரு முறை 'லட்ச தீபம்' பெருவிழா நடத்தப் பெறுகிறது. ''அலகில் சோதியன்'' ''அருட்பெருஞ்சோதி'' ''சோதியே சுடரே'' ''தீப மங்கள ஜோதி'' என்று ஒளிவடிவாகிய இறைவனைக் காணும் பேற்றினை இத்திருக்கோயிலில் காணலாம்.

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைதோறும் இறையன்பர்கள். வேதகிரியை-மலைவலம் வருதலும் வழிபடுதலும் தொடரும் வரலாற்று காட்சிகளைக் காணலாம். மலைவலம் வரும் போது சஞ்சீவி மலைச்சாரலை அனுபவிக்கிறார்கள். மலையிடை பிறக்கும் மருத்துவச் செடிகளின் மந்தகாச புன்னகையில் முகிழ்க்கும் தென்றலால் மக்கள் பிணி பறந்து மகிழ்கின்றார்கள்.


நிலமட்டத்திலிருந்து ஐநூறு அடி உயரத்தில் ஆடவல்லான் சபை அமைத்துள்ளோம். உண்மையிலேயே விண்ணில் ஏறி ஆண்டவனை தரிசிக்கும் பயனை உணரலாம்.

இவ்வாறாக அருளை அகமாக உணரவும் பொருட்பயனாக வேண்டுவோர்க்கு 'மலை மருந்தாக' 'சங்குபிறக்கும் சால்புடையதாக 'லட்சதீபம்' ஏற்றும் உயர் ஒளிவிளக்காக, 'சஞ்சீவி சாரலாக' மேகம் விரட்டும் கோயிலில் மோகம் விரட்டும் 'ஆடவல்லான்' மூர்த்தியாக காட்சியளிக்க திருக்கழுக்குன்றம் திகழ்கின்றது.

வருகின்ற 4-9-92-ல் லட்சதீபப் பெருவிழா நடைபெற இருக்கிறது. அன்பர்கள் யாவரும் வருகைபுரிந்து வழிபட்டு வாலறிவன் அருள் பெற்று வாழ்வாங்கு வாழ அழைக்கிறேன். ஒளிவிளக்கு ஏற்றுவோம் வாரீர்—ஓங்கும் வாழ்வு பாரீர்!



விசயனின் கணைக்கும் அகப்படாமல் காடு மலையெங்கும் ஓடி, பாண்டவர்களைக் களைப்பித்து கண்ணுக்கே தென்படாமல் மறைந்து விடுகிறது அந்த மாயமான். ஓடி ஓடி இளைப்புற்ற தருமர் ஒரு சந்தன மரத்தினடியில் மயங்கி விழுகிறார். வீமன் தண்ணீர் கொண்டு வருமாறு சகாதேவனை ஏவுகின்றான்.
குன்றொன்றின் மேல் ஏறி நீர்நிலை அருகில் உள்ளதா எனத் தேடுகிறான் சகாதேவன்.
அதோ அங்கொரு பொய்கை இருக்கிறதே!
பொய்கையைத்தேடி ஓடித் தண்ணீரை வாரிக் குடிக்கிறான் சகாதேவன்.
ஆ! ஐயோ தொண்டை பற்றி எரிகிறதே!
தம்பி நகுலா! நீர் கொணரச் சென்ற சகாதேவன் மீண்டும் காணோம். நீ போய் விரைந்து நீர் கொண்டு வா
நகுலனும் அதே நச்சுப் பொய்கைக்கு வந்து நீரினை அருந்தி, சுருண்டு விழுந்து மாண்டு-போகிறான்.
"அர்ச்சுனா! தாகம் உயிரைக் கொல்கிறதே! நீயாவது போய் விரைந்து நீர் கொண்டு வா"
இதோ போய் உடனே நீருடன் வருகிறேன்.
நீர் அருந்திய தம்பியர் மாண்டு கிடப்பதைக் காணாமல் அர்ச்சுனன், தானும் ஆவலாய்த் தண்ணீர் பருகுகிறான்.
ஆ! ஐயோ!



# எல்லையிலா அருள்சுரக்கும் திருவல்லிக்கேணி அருள்மிகு எல்லம்மன் ஆலயம்

டாக்டர் த. அமிர்தலிங்கம்

உலகை விட பெரியது எது?
மலையைவிட பெரியது எது?
கடலை விட பெரியது எது?

பெரியதில் எல்லாம் பெரியது எது?என்று வினாக்கள் பல அடுக்கினாலும் அதற்குக் கூறத் தக்க பதில் ஒன்றே ஒன்றுதான்.

அன்பே பெரியது, அதிலும் தாயன்புதான் பெரிய அனைத்திலும் பெரியது; மானிடத் தாய் காட்டும் அன்பு பெரியதென்றால் அகில அண்டங்களையும் படைத்து, காத்து சங்காரம் செய்யும் அகிலாண்டேசுவரியின் அன்பே பெரிய எவற்றிலும் பெரியது என்பது கூறாமலே விளங்கும்.

பிள்ளைக்கு ஒரு நோய் என்றால் பெற்ற தாய் பத்தியம் இருந்து அந்தக் குழந்தையை இரட்சிப்பாள். தான் பெற்ற பிள்ளைகளுக்காகவே அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இராஜராஜேஸ்வரி, திருக்கோயில்கள் தோறும் கோயில் கொண்டு திருவருளும் பாலித்து, இப் பாரத மண்ணை-அதிலும் சிறப்பாக நம் தமிழ் மண்ணை புண்ணிய மண்ணாக-பக்தி மணம் கமழும் பண்பாட்டு மண்ணாகப் பெருமைப்படுத்தி அருளாட்சி புரிந்து வருகின்றாள்.

எல்லையிலா உலகங்கள் யாவையும் படைத்தவள் அவளே, ஆயிரம் கண்ணால் காப்பவள் அவளே, உயிர்கள் இளைப்பாறிடும் பொருட்டுத் தன் வான் கருணையால் அழிப்பவளும் அதே பராசக்திதான். பராசக்தியின் எல்லையிலாக் கருணையை அபிராமிபட்டர் பின்வருமாறு பாடுகிறார்.

''பூத்தவளே புவனம் பதினான்கையும்
பூத்தவண்ணம்
காத்தவளே! பின் கரந்தவளே! கறை
கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு
இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி மற்றோர்
தெய்வம் வந்திப்பதே''

என்ற பாடலைப் படித்துணருங்கள்.

எல்லையில்லாத உலகங்களுக்குத் தாய் என்பதாலே அவள் எல்லையம்மன் என்றழைக்கப்படுகிறாள். நாம் கூப்பிடும்போது நம்வீட்டு எல்லைக்கே வந்து அருள்பவள் என்பதாலும் எல்லையம்மன் என்றழைக்கப்படுகிறாள். தன் எல்லையில்லா அன்பால், குழந்தைகள் ஆகிய நாம் செய்யும் பிழைகள் ஒன்றல்ல, இரண்டல்ல, அவை அளவில் அதிகமானவையாக இருந்தபோதும், தன் எல்லையற்ற வான் கருணையால் அவற்றையெல்லாம் பொறுத்துக் கொண்டு நம்மைக் காப்பதாலும் அன்னை எல்லையம்மன் ஆகிறாள்.

''அளவறு பிழைகள் பொறுத்தருள் நின்னை
அணியுறப் பாதியில் வைத்தான்
தளர்பிழை மூன்றே பொறுப்பவள் தன்னைச்
சடைமுடி வைத்தனன் அதனால்
பிளவியல் மதியம் சூடிய பெருமான் பித்தன்
என்றொரு பெயர் பெற்றான்
களமர்மொய் கழனிசூழ் திருவானைக்கா
அகிலாண்ட நாயகியே''

என்ற பாடலில் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் எல்லையிலாத கருணை கொண்டவள் அம்பிகை என்று போற்றுவதைக் காணுகிறோம்.

''மன்னுயிர் புவனம் ஏனை மற்றுள உயிர்க்
கெல்லாம்
அன்னையாய் உதவி நாளும் அவற்றினை
வளர்த்து நிற்பாள்'

ஆகிய அகிலாண்டேசுவரியே மதுரையில் மீனாட்சியாக, காஞ்சியில் காமாட்சியாக, காசியில் விசாலாட்சியாக அருள்பாலிப்பதைப் போலவே கற்றார்கள் போற்றும் திருவல்லிக் கேணியிலே எல்லம்மனாக கோயில் கொண்டு திருவருள் பாலித்து வருகின்றாள்.

''அபிதான சிந்தாமணி'' என்ற நூல் 'எல்லையம்மன்' என்ற பெயருக்குப் பின்வருமாறு விளக்கம் கூறுகிறது.

எல்லையம்மன் : இவள் மாரிவேறுபாடு, இவளை எல்லையிலிருத்தலால் எல்லையம்மன் எனவும், வீதியிலிருப்பதால் தெருவீதியம்மன் எனவும், சந்தியில் இருப்பதால் சந்தியம்மன் எனவும், சோலையில் இருப்பதால் சோலையம்மன் எனவும், பனையடியிலிருப்பதால் கருக்காத்தாள் எனவும், வேம்படியில் இருப்பதால் வேம்படியம்மை எனவும், ஆலடியில் இருப்பதால் ஆலை அமர்ந்தாள் எனவும், எட்டிமரத்தடியில் இருப்பதால் எட்டியம்மன் எனவும் கூறுவர்.

இது அபிதான சிந்தாமணி எல்லையம்மன் என்பதற்குத் தந்துள்ள விளக்கமாகும்.

அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்துள்ள பூரணியே, ஆதி பராசக்தியே, இராஜ ராஜேஸ்வரியே நம் எல்லைக்கு வந்து அருளும் போது எல்லம்மன் ஆகிறாள். பல வண்ணங்களில், வடிவங்களில் இனிப்புகளைச் செய்து நாம் உண்டு மகிழ்கிறோம். அந்த இனிப்புகள் செய்வதற்கு அடிப்படையாக உதவும் சர்க்கரை ஒரு பொருள் தானே! அதுபோல ஆயிரமாயிரம் பெயர்களைக் கூறி நாம் அழைத்திட்டாலும் பராசக்தி ஒன்றே தான் என்பதை ஆன்றோர்கள் தெளிவுபடுத்துகிறார்கள்.

''இன்சுவை சர்க்கரை கொண்டே
எண்ணிலா வண்ணம் கண்டே
தின்சுவை பலகா ரங்கள்
திரளெனச் செய்த போதும்
இன்சுவை ஒன்றே யாகும்
செய்திடும் சிலைகள்
எண்வகை பலவே யாகும்
எனினும் சக்தி ஒன்றே''.

''மலைமகள் துர்க்கை காளி
மகமாயி மாரி யாயி
அலைமகள் இராதை கோதை
அலர்மேல் மங்கை நாச்சி
கலைமகள் என்று போற்றுப்
கணக்கிலா அழகு தெய்வச்
சிலைபல எனினும் ஆங்கே
இருப்பது சக்தி ஒன்றே.''

எனவரும் கவிதைகளால் எல்லம்மன் என அழைக்கப்பெறும் அம்பிகையும், எல்லையிலாத உலகைக் காப்பவளும், எல்லையிலாத வான் கருணை கொண்டவளும் அன்னை இராஜ ராஜேஸ்வரியே என்பது தெளிவாகி விடுகிறது அன்றோ!

இனி, திருவல்லிக்கேணியில் கோயில் கொண்டு விளங்கும் அருள்மிகு எல்லம்மன் ஆலயத்திற்கே வழிபடச் செல்கிறோம் நாம், துவஜஸ்தம்பத்தோடு கூடிய சிறிய ஆலயம். ஆலயம் சிறியது என்றபோதும் எல்லம்மன் தோற்றம் பெரியது. அமர்ந்தநிலையில் சாந்த சொரூபியாய், ஆஜானுபாகுவாய், கண்டதும் நம்மையும் அறியாமல் சாஷ்டாங்கமாகவிழுந்து வணங்கத்தக்க கருணைமுகப் பொலிவோடு காட்சிதருகிறாள் அருள்மிகு எல்லம்மன் (இந்த இதழின் முகப்பை அலங்கரிப்பது திருவல்லிக் கேணி அருள்மிகு எல்லம்மன் கருணைத் தோற்றமே).

தன் ஒரு கரத்தில் கொண்ட உடுக்கையால் ஓங்கார ஒலி உண்டாக்கி உயிர்களைப் படைக்கின்றாள் ஓங்காரி. இன்னொரு கரத்தில் கொண்டிருக்கும் திரிசூலத்தால் மாயையை மாய்க்கின்றாள் திரிசூலி, ஒரு கையில் ஞான வாள் கொண்டு அஞ்ஞானத்தை வெட்டி மற்றொரு கரத்தில் உள்ள பொற்கிண்ணத்தால் ஞானப்பால் ஊட்டுகின்றாள் ஞானாம்பிகை.

திருக்கோயில் கட்டப்பட்டு சுமார் 150 ஆண்டுகளாவது ஆகியிருக்கக்கூடும். 1969-இல் கும்பாபிசேகம், 1981-இல் கும்பாபிசேகம் என ஐதீகம் தவறாமல் ஆன்றோர்கள் அருள்மிகு எல்லம்மனுக்கு நிகழ்த்தியுள்ளனர். 1983 இல் துவஜஸ்தம்பத்திற்குக் கும்பாபிசேகம் நிகழ்ந்துள்ளது. இப்போது திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு 23-8-92 அன்று மிக விமரிசையாகத் திருக்குட நீராட்டு விழா நடைபெறவுள்ளது. திருக்கோயிலின் மேல் தளம் தட்டோடுவேய்தல், திருக்கோயில் மின் இணைப்புப் புதுப்பித்தல், விமானங்கள் புதுப்பித்தல் துவஜஸ்தம்பத்திற்குச் செப்புத் தகடு வேய்தல், திருக்கோயில் தரைப்பகுதி முழுவதும் பளிங்குக் கற்கள் பதித்தல், உற்சவர் அம்பாள் சந்நிதியை புதுப்பித்தல், நடராஜர் சந்நிதியை விரிவுபடுத்தி பஞ்சமூர்த்திகள் வைக்கும் வகையில் அலங்கார மண்டபத்தைப் புதுப்பித்துக் கட்டுதல் முதலான திருப்பணிகள் யாவும் இப்போது மேற்கொள்ளப்பட்டுத் திருக்கோயிலுக்குச் செலவின்றி முழுவதும் நன்கொடையாளர்களே செய்து தரும் திருப்பணியாக நிறைவேற்றப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

பக்தர்களுக்குக் குறைவில்லாமல் செல்வத்தை வாரி வாரி வழங்குகின்றாள் அம்பிகை; அம்பிகைக்குப் பக்தர்களும் தாய்க்குப் பிள்ளை பெருமைகள் செய்து மகிழ்வதைப் போல திருப்பணிகள் செய்து பூரிக்கிறார்கள்.

இல்லாமையை இல்லை ஆக்குபவள் எல்லம்மன். தனம், கல்வி, உடல்நலம், வீடுபேறு யாவும் தருபவள் எல்லம்மன். செல்வமுடன் செல்வாக்கும் சேர உயர்பதவிகளை அளிப்பவள் எல்லையிலாத கருணை கொண்ட எல்லம்மன்''.

''தனம்தரும், கல்விதரும், ஒருநாளும்
தளர்வறியா
மனம் தரும், தெய்வ வடிவும்தரும்,
நெஞ்சில் வஞ்சம் இல்லா

## வளமுடன் வாழ வழி..

சென்னை சார்ந்த திருவேற்காடு.

# அருள்மிகு தேவி கருமாரி அம்மன்

திருச்சாம்பலை அணிவார்க்குக் கைமேல் பலன் கிடைக்கும்.

நாம் பண்ணிய பாவம் போகும்.
புண்ணியம் ஆகும்.

நோயற்ற சுகவாழ்வுடன் செல்வம் சேர
இம்மையிலும் மறுமையிலும்
செல்வாக்குடனும், நிம்மதியுடனும் வாழலாம்,

**மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு**
**சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு**
**தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு**
**செந்துவர்வாய் உமைபங்கன் திருஆலவாயான்**
**திருநீறே !**

—திருஞானசம்பந்தர்.



இனம் தரும், நல்லன எல்லாம் தரும்
அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி
கடைக்கண்களே.

''இல்லாமை சொல்லி ஒருவர் தம்பால்
சென்று இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகு விரேல்
நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற, கயவர் தம்பால் ஒரு
காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை
பாதங்கள் சேர்மின்களே.''

''வையம், துரகம், மதகிரி, மாமகுடம்
சிவிகை
பெய்யும் கனகம், பெருவிலை ஆரம்,
பிறை முடித்த
ஐயன்திரு மனையாள் அடித்தாமரைக்கு
அன்புமுன்பு
செய்யும் தவம் உடையார்க்கு
உளவாகிய சின்னங்களே''

திருவல்லிக்கேணிப் பகுதியிலே ஒரு மக்கள் தொண்டர், பலகாலமாக பொதுத் தொண்டில் ஈடுபட்டு வருகிறார். இருந்தாலும் அவருடைய உழைப்புக்கேற்ப பதவிப் பெருமைகள் சேரவில்லை என்பதாக அவருக்கு மனவருத்தம் இருந்து வந்தது. ஒரு வெள்ளிக்கிழமையன்று எல்லம்மனுக்கு அபிசேக ஆராதனை புரிந்து, பட்டுப் புடவை சாற்றினார். அம்பிகையின் திருவருளால் அவர் விரும்பியவாறே அவருக்கு மகுடம் வந்து சேர்ந்தது. இன்றைக்கு உயர் பதவியில் அமர்ந்து மக்கள் தொண்டை மனநிறைவோடு ஆற்றி வருகிறார் அந்த அம்பிகை பக்தர்.

இன்னொரு எல்லம்மன் பக்தர், அம்பிகையின் திருவருளை வேண்டினார். வெளிநாட்டில் வேலை கிடைத்திட வேண்டும் என்பது அவருடைய கோரிக்கை. நாள்தோறும் அம்பிகையிடம் தன் கோரிக்கையைக் கூறி வழிபட்டார். ஒரு மண்டலம் அவருடைய கோரிக்கையை அம்பிகையிடம் கூறி முறையிட அவர் விருப்பப்படியே துபாயில் வேலை கிடைத்துவிட்டது. இன்றைக்குப் பொன்னும் பொருளும் அம்பிகையின் திருவருளால் குறைவறப் பெற்று மகிழும் அந்தப் பக்தர் அருள்மிகு எல்லம்மனுக்குத் திருப்பணி என்று அறிந்தவுடன் அம்மன்திருப்பணிக்கு அங்கிருந்தவாறே காசோலை அனுப்பி வைத்திருக்கிறார் என்றால் எல்லம்மனின் திருவருள் எல்லையற்றது தானே!

வெள்ளிக்கிழமை தோறும் அருள்மிகு எல்லம்மன் ஆலயத்திற்குத் தாய்மார்கள் கூட்டம்அலைகடலோ என்று எண்ணும்படியாக வருகிறது. சுஹாசினி மண்டலியைச் சார்ந்த தாய்மார்கள் விளக்கு பூஜையும் குங்கும அர்ச்சனையும் செய்து அருள்மிகு எல்லம்மனைப் போற்றுகிறார்கள். கோரும் வரம் கொடுத்துக் கோரிக்கையை நிறைவேற்றுவதில் எல்லம்மனுக்கு இணை எல்லம்மனே என்று சொல்லி அத்தாய்மார்கள் பூரிப்பதைக் காணலாம். தன் மருமகள், சுகப் பிரசவம் காண வேண்டும் என்று விளக்குபூஜை செய்தேன்; என்கோரிக்கைக்குக் கைமேல் பலன் கிடைத்தது. குழந்தை வேலாயுதன் போல எனக்குப் பேரன் பிறந்து தாயும் சேயும் சுகமாய் இருப்பதற்கு எல்லம்மனே காரணம் என்று பூரித்துப் போகிறார், அம்மன் கோயில் இருக்கும் அதே தெருவில் வசித்து வரும் பங்கஜம் அம்மாள்.

ஆலங்காத்த பிள்ளை தெருவில் வசித்து வரும் சரசுவதி அம்மாள் தம் ஒரே மகள் சாந்தியின் உடல் நலம் வேண்டி அருள்மிகு எல்லம்மனிடம் பிரார்த்தித்துக்கொண்டாராம். ஏழு வயதிலிருந்தே சாந்தி அடிக்கடி இருமிக் கொண்டிருக்க அருகில் இருந்த கஸ்தூரிபாய் மருத்துவ மனைக்குக் கூட்டிப் போய் காட்டியிருக்கிறார்கள். சாந்திக்குக் காசநோய்கண்டி



'' திருக்கோயில்கள் சமுதாய நல நிலையங்கள், திருக்கோயில்களின் தூய்மையைப் பேணி, நேர்மையான, ஊழலுக்கு இடம் கொடாத, மேன்மையான நிர்வாகத்தை வழங்குவதில் தமிழக அரசு முன்னைவிட விழிப்பாகச் செயல்பட்டு வருகிறது; வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் ''.

—மாண்புமிகு முதல்வர்
டாக்டர் புரட்சித் தலைவி

ருப்பதால் தாம்பரம் காசநோய் மருத்துவ மனைக்குக் கொண்டுபோய் காட்டுவது நல்லது என்று மருத்துவர் கூற தாம்பரத்திற்குக் கூட்டி போய்க் காட்டியிருக்கிறார்கள். தாம்பரம் மருத்துவமனையில் நல்ல மருந்து மாத்திரை களைக் கொடுத்த போதும், குழந்தை சாந்தி அவற்றை அருந்தாமல் அடம்பிடித்து அழுது சாதித்திருக்கிறாள். மருந்து உட்கொள்ளாத தால் காசநோய் நாளுக்கு நாள் அதிகமாகி வந்துள்ளது. சரசுவதி அம்மாள் தன் குழந்தை சாந்தி நலம் பெற வேண்டும் என்று அருள்மிகு எல்லம்மனிடம் முறையிட்டுக் கொண்டார்; ஒரு மண்டலம் சரசுவதியம்மாள் விடாமல் பிரார்த்திக்கவே மருந்து மாத்திரை இல்லா மலே சாந்தி இப்போது குணமாகிவிட்டாளாம். என்மகளைக் குணப்படுத்திய எல்லம்மன் எல்லையில்லாத சக்தி கொண்டவள் என்று கூறிப் பூரித்துப் போகிறார் சரசுவதி அம்மாள். ஆடி மாசம் அம்மனுக்குக் கூழ்க் காய்ச்சி ஊற்றுவதாக வேண்டிக் கொண்டிருப்பதாகவும் வரும் ஞாயிற்றுக்கிழமை தன் பிரார்த்தனையை நிறைவேற்றப் போவதாகவும் சரசுவதி அம் மாள் தெரிவிக்கிறார்.

எல்லம்மன் ஆலயத்தில் எல்லையிலாத கூட்டம், பக்தர் ஒவ்வொருவரிடத்திலும் அம்மன் குறை முடித்த அருள்வரலாறு இல்லா மலா இருக்கும்? ஆலயப் பிரகாரத்தைச் சுற்றி வரும்போது திருப்பணி உபயம் இராஜஸ்தான் ஜைன சங்கம் எனக் கல்வெட்டில் பொறித் திருக்கக் காண்கிறோம். இந்துக்கள் அல்லாத பிற சமய மக்களையும் அருள்மிகு எல்லம்மன் கவர்ந்திருக்கிறாள் என்றால் அவள் பேரருட் கருணையை என்னென்பது! இந்து, முஸ்லீம், கிறித்து, ஜைனர், புத்தர் என்பதெல்லாம் நாம் போட்டுக் கொண்ட எல்லைக் கோடுகள்தானே! அகிலாண்டேசுவரி சாதி, மத எல்லைகளைக் கடந்தவள். அவளுக்கு ஈரேழு புவனமும் தன் வீடேயாகும். எல்லா உயிர்களும் அவளுக்குத் தன் பிள்ளைகளேயாகும். ஆகவேதான் பிற மதத்தினர் என்று நாம் சுட்டினாலும் கூட, அவர்களும்கூட அம்பிகையின் திருவருளை உணர்ந்து வந்து வழிபட்டு வாழ்வு காண் கிறார்கள்.

அருள்மிகு எல்லம்மனுக்கு ஆடியில்தான் பத்துநாட்கள் பிரம்மோற்சவம் கொண்டாடப் படுகிறது. ஆடிப்பூர விழா, மிக விசேசமாகக் கொண்டாடப்படும். நவராத்திரி விழாவும் மிக விசேஷம். இன்னிசைக் கச்சேரிகளுடன் இவ் விழாக்கள் கொண்டாடப்படும். இன்னும் எல்லம்மன் ஆலயத்திலேயே கோயில் கொண் டுள்ள முருகப் பெருமானுக்கு ஒவ்வொரு கிருத்திகையும் விசேசம்தான். தைப்பூசம், பங்குனி உத்திரம், வைகாசி விசாகம் என முருக னுக்கும் ஆண்டுதோறும் விழாக்கள் உண்டு. நடராஜருக்கு ஆனி திருமஞ்சன அபிசேகம் சிறப்பாக நடைபெறுகிறது..

''கோமளவல்லியை, திருவல்லிக்கேணி
கோயில் வைகும்
யாமள வல்லியை, ஏதமிலாளை எழுதரிய
சாமள மேனிச் சகல கலா பயில் தன்னைத்
தம்மால்
ஆமளவும் தொழுவார்எழுபாருக்கும்ஆதிபரே''

23-8-92 அன்று நடைபெறும் அருள்மிகு எல்லம்மன் ஆலயத் திருக்குட நீராட்டு விழா காணவும், எல்லையிலாத அன்னை திருவருள் கூடவும் அன்பர்களை வருகவருகவென அழைக் கின்றேன். எல்லாம் எனையாளும் அருள்மிகு எல்லம்மன் திருவருள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002

உ

# அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயில்

திருக்கழுக்குன்றம்,

செங்கல்பட்டு எம்.ஜி.ஆர் மாவட்டம்.

## சங்குதீர்த்த புஷ்கரமேளா
## இலட்ச தீபப் பெருவிழா வேண்டுகோள்

# தீப தரிசனம்

''விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்''
''திருவிளக்கிட்டாரைத் தெய்வம் அறியும்'' — சைவத்திருமுறை.

ஆன்மநேய அன்பீர்! அகமலர்ந்த வணக்கம்.

நிகழும் திருவள்ளுவராண்டு 2024 (ஆங்கிரச) ஆவணித் திங்கள் 19-ஆம் நாள் 4—9—1992 வெள்ளிக்கிழமை காலை 9-53 மணிக்கு குருபகவான் சிம்மராசியிலிருந்து கன்னியாராசிக்குப் பிரவேசிக்கின்றபோது சங்குதீர்த்த புஷ்கரமும், மாலையில் இலட்ச தீபப் பெருவிழாவும் சிறப்பாக நடைபெறவிருக்கின்றது. எனவே இதனைக்காணும் அன்பர்கள் தங்களால் இயன்ற அளவு விழாவில் பங்கேற்றும், தீப கைங்கர்யத்திற்கு பொருளுதவி புரிந்தும் இறையருள் பெற்று வாழ்வாங்கு வளமுடன் நீடுவாழ அன்புடன் வேண்டுகிறோம்.

ஒரு தீபத்திற்கு ரூ. 2 (இரண்டு) வீதம் எத்தனை தீபத்திற்கு வேண்டுமானாலும் தொகையை திருக்கோயிலில் செலுத்தி இகபர சுபயோகங்களை அடைய பிரார்த்திக் கின்றோம். தொகையை ரொக்கமாகவோ மணியார்டர் மூலமாகவோ செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம். தொகை செலுத்த வேண்டிய முகவரி.

**நிர்வாக அதிகாரி**
செயலாளர் - பொருளாளர்
இலட்ச தீப விழாக் குழு
அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயில்,
திருக்கழுக்குன்றம்-603 109,
செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்,
தமிழ்நாடு.

இங்ஙனம்

**இலட்ச தீபப் பெருவிழாக் குழுவினர்**

திருக்கழுக்குன்றம்

பதிவு எண் எம். 7039.





திருக்கோயில் நிர்வாக வாரியத்தின் சிறப்புமிகு கூட்டம் 20-6-92 அன்று காலை தலைமைச் செயலகத்தில் சிறப்புற நடைபெற்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சீரிய தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் திருமிகு டி. வி. வெங்கட்டராமன், ஐ.ஏ.எஸ். அவர்கள், அறநிலையத் துறைச் செயலாளர் திருமிகு சீ. தங்கராசு, ஐ.ஏ.எஸ். அவர்கள், அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு துரை. சுந்தரேசன், ஐ.ஏ.எஸ்., ஆகியோர் கலந்து கொண்டனர். திருக்கோயில் நிர்வாக வாரிய மாநிலக் குழுவின் உறுப்பினர்கள் உடன் உள்ளார்கள்.

